# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 6

February 2014

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# முதலாளித்துவ உலகமயத்தில் கொத்தடிமை உழைப்பு, கட்டாய உழைப்பின் துயர்மிகுந்த காட்சி

கொத்தடிமை உழைப்பின் கொடூரத் தன்மையை உணர்த்த நாம் இங்கு குறிப்பிட்டுக் காட்டவிருக்கும் சம்பவம் நம் அனைவரையுமே மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கும். மேலும் இவை எந்த அளவிற்கு காட்டு மிராண்டித்தனமான ஒரு எல்லையை எட்டியிருக் கிறது என்பதையும் நமக்குக் காட்டும்! மேற்கு ஒடிசா காலஹந்தி மாவட்டத்தின் புலம்பெயர்ந்த 12 தொழிலாளர்கள் ஒரு லேபர் காண்ட்ராக்டரிடம் ஹைதராபாத்தில் உள்ள ஒரு செங்கல் சூளையில் வேலை செய்வது என்ற வாக்குறுதியின் பெயரில் முன்பணம் பெற்றார்கள். ஆனால் காண்ட்ராக்டர் அவர்களை சொன்ன இடத்திற்கு அழைத்துச் செல்லாமல் சட்டீஸ்கர் மாநிலத்தின் ராய்ப்பூரில் உள்ள மற்றொரு செங்கல் சூளைக்கு வலுக் கட்டாயமாக அழைத்துச் செல்ல முயன்றார். அப் போது அவர்களில் 10 பேர் எப்படியோ அவர் களிடமிருந்து தப்பிவிட இரண்டுபேர் மட்டும் சிக்கிக் கொண்டனர். பின்பு அந்தக்கும்பல் அவர்களை மிகக்கொடூரமாக சித்திரவதை செய்ததோடு காலஹந்திக்குத் திரும்பும் வழியில் போலங்கீர் மாவட்டத்தில் ஒரு இடத்தில் வாகனத்தை நிறுத்தி அவர்களின் வலதுகரங்களை வெட்டியெறிந்து சாலையின் ஓரத்தில் வீசிவிட்டுச் சென்றுவிட்டனர். இரத்தவெள்ளத்தில் கிடந்த அவர்களை பக்கத்து கிராமமக்கள் காப்பாற்றி உதவிகள் செய்தனர். இந்த சம்பவம் கடந்த டிசம்பர் 15 அன்று நடந்தது.

ஆனால் இந்த சம்பவம் நடந்த மறுநாளே வறுமை பீடிக்கப்பட்ட ஒடிசாவின் மற்றொரு பகுதியில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் உட்பட 300 தொழிலாளர்களை மலிவான உழைப்புச் சுரண்டலுக்காக மிரட்டி பலவந்தமாக பிற மாநிலத் திற்கு கடத்தப்படும் பொழுது மீட்கப்பட்டனர். பின்பு ஒரு சில மணி நேரத்திற்குள் அந்தத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர்.

இந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்களை சப்ளை செய்கின்ற காண்ட்ராக்ட் மாஃபியாக் களின் கூட்டம் அதிகாரமாடத்தில் உலாவருகின்ற அனைத்து கட்சிகளோடும் எந்த வேறுபாடுமின்றி தொடர்பு வைத்திருக்கின்ற ஒரு அரசியல் கெடு நோக்கம் கொண்ட கூட்டமாகவே பெரும்பாலும் இருந்துவருகிறது. கடன் முன்பணத்தை வழங்கி தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி அவர்களின் மொத்த வாழ்க்கையையும் பல மாதங்களுக்கு கட்டுப் படுத்துதல் என்பது கொத்தடிமைத்தனத்தின் ஒரு வடிவம்தான். கடன் கொடுத்து கொத்தடிமை யாக்குவதுதான் தற்போது நவீன பூர்ஷுவா சமூகத் தில்கூட பரந்துபட்ட அளவில் பயன்படுத்தப்படும் முறையாக இருந்துவருகின்றது. வாங்கிய கடனை திரும்பச் செலுத்துவதற்காக பாதிக்கப்பட்டவரிடம் உழைப்பைக் கோரும்போது அவர்கள் கொத்தடிமை யாகிறார்கள். அவர்களிடமிருந்து இவ்வாறு பெறப் பட்ட உழைப்பின் மதிப்பானது "கடன்பெறப்பட்ட" தொகையை விட மிகவும் பெரிதாகும்.

இது ஒடிசாவில் மட்டுமல்ல பல மாநிலங் களிலிருந்தும் இம்மாதிரியான கொடூரமான குற்றச் சம்பவங்கள் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. நவம்பர் 18, 2013ல் தமிழகத்தின் காஞ்சி புரம் மாவட்டத்தில் 24 கொத்தடிமைத் தொழி லாளர்கள் ஒரு மர அறுவை ஆலையிலிருந்து மீட்கப்பட்டார்கள்.

இவ்வாறாக வெளித்தெரியும் சம்பவங்கள் அனைத்தும் முதலாளித்துவ நவீன இந்தியாவின் கொத்தடிமை வியாபாரம், ஆள்கடத்தல் படலத்தின் மறைந்திருக்கும் பனிமலையின வெளித்தெரியும் ஒரு சிறுமுனையே. ஆனால் நம்மையெல்லாம் திகைப்படையச் செய்கின்ற விஷயம் என்னவெனில் அரசாங்கமோ அல்லது அதன் அதிநவீனத் தொழில்நுட்பத்திறன் கொண்ட போலீஸ்துறை நிர்வாகமோ இம்மாதிரியான கொடூரவியாபாரம் நடந்துவருவது குறித்து எதுவுமே அறியாததுபோல் இருப்பதுதான், சமீபத்தில் நடந்த ஒடிசா சம்பவத்திலும் இதே நிலைதான். சம்பிரதாயமான சில ரெய்டுகளையும் ஆள்வேட்டையையும் நடத்தினார்களே தவிர இதற்குக் காரணமான காண்ட்ராக்ட் சுறாக்களின் மீது போலீசாரால் கைவைக்கமுடியவில்லை. இவர்கள் ஏன் இவ்வாறு சுதந்திரமாக விடப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் சிரமமில்லை. ஏனெனில் இந்த புலம் பெயர் கொத்தடிமைத் தொழிலாளர்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் வருமானம் – மேற்கு ஒடிசா பகுதியில் மட்டும் ஆண்டுக்கு ரூ.500 கோடியை விஞ்சுகிறது. இவ்வளவு அதிகபட்சத் தொகையைக் கொண்ட வியாபாரக் கொள்ளையை அதிகார மற்றும் சட்ட அமலாக்கத்துறையின் துணையின்றி எவ்வாறு

தொடர்ச்சி 4ம் பக்கம்

# புதுதில்லியில் பெண்கள் மீதான குற்றங்களுக்கெதிரான தேசிய மாநாடு

பெண்கள் மீதான குற்றங்கள் நாட்டில் பல்கிப் பெருகிவருவதற்கெதிராக நடைபெறும் போராட்ட உணர்வுக்கு ஓர் சின்னமாக திகழ்ந்த, மாணவர்களும் இளைஞர்களும் வெகுண்டெழுந்து டெல்லியில் நடத்திய மாபெரும் 'நிர்பயா' இயக்கம் நடந்து ஓர் ஆண்டு முடிந்துவிட்டது. இந்நிகழ்வை நினைவு கூர்ந்தும் பெண்களுக்கு இழைக்கப்படும் வன் கொடுமைகளுக்கெதிரான இயக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO)ஆகிய அமைப்புக்கள் அகில இந்திய அளவில் ஓர் ஒருங்கிணைப்புக் கமிட்டியை ஏற்படுத்தி பெண்கள் மீதான குற்றங்களுக்கெதி ரான தேசிய மாநாட்டை டெல்லி மாவ்லங்கர் அரங்கில் டிச. 29 2013 அன்று நடத்தின.

மாநாட்டின் நோக்கத்தினை அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்க தலைவர் தோழர் பி ஆர் மஞ்சுநாத் அவர்கள் விளக்கியுரைக்கையில் நாடெங்கிலும் பல மாநில மாநாடுகளும் ஆர்ப் பாட்டங்களும் என இம் மாநாட்டின் முன் தயாரிப் பாக பல வடிவங்களில் போராட்டங்கள் நடை பெற்றதை குறிப்பிட்டார். இம்மாநாட்டை வெறும் சம் பிரதாய நினைவு நிகழ்ச்சி யாக அல்லாமல் எதிர்காலத்தில் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் விதமாக ஓர் துவக்க மாக நடத்தவேண்டுமென இம்மூன்று அமைப்பு களும் கருதியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.





உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பி என் ஸ்ரீகிருஷ்ணா அவர்கள் இம்மாநாட்டை துவக்கி வைத்தார். பெண்களுக் கெதிராக குற்றங்கள் பெருகி வருவதை எண்ணி ஆழ்ந்த கவலை தெரிவித்த அவர், 'பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறையை எதிர்த்து இளைஞர்களிடம் தோன்றி யுள்ள ஆக்ரோஷம் ஆறுதல் தருவதாக இருக்கின்றது. நமது சொந்த தாய்மார் களாகவும் சகோதரி களாகவும் மகள்களாகவும் இருக்கும் பெண்களை நாம் அதற்கேற்ப உரிய மரியாதையுடன் நடத்தத் தவறியதானது தலைகுனியவைக்கும் ஒரு விஷயமாகும். தொன்றுதொட்டு நிலவிவரும் இப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு எட்டப்படவில்லை. நிர்பயா சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து ஆண் பெண் இருபாலரிடமும் இது குறித்துக் குமுறிக் கொண் டிருந்த கோபாவேசம் எரிமலையாக வெடித் தெழுந்தது.

பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறை வன் முறைகள் என்ற இப்பிரச்சினை ஒரு சிக்கலான சமூக–சட்ட பிரச்சினையாகும். இதற்கு சட்டப்படி யான எளிய தீர்வு கிடையாது. பெண்களுக்கெதிரான வன்முறை மனதிலேயே கட்டி அமைக்கப்படுகிறது; அதனை முதலில் பிரித்து அகற்ற வேண்டும். அங்கு தான் இப்பிரச்சினையின் சமூக அம்சம் முக்கியத் துவம் பெறுகிறது. பணியிடங்களிலும் சரி, வீட்டிலும் சரி, பொது வாழ்விலும் சரி பெண்களை தனது வாழ்க்கையின் சமபங்காக ஆண்கள் கருத அவர்கள் மனதை மாற்றி சீர்செய்ய சமூக நடவடிக் கைகள் தேவையாகும். அத்தகைய அணுகுமுறை ஆண்களிடம் இல்லாதவரை ஊடகங்களில் நாம் காண்பது போன்று பெண்களின்மீதான பல வகையான வன்முறைகள் நடந்தேதீரும். நாம் சட்டங்கள் உருவாக்கும் மனப்போக்கை கொண் டிருக்கிறோம், பெண்கள் பாதுகாப்பு குறித்து பல சட்டங்களைக் கொண்டிருக்கிறோம், பரிந்துரை களைச் செய்ய கமிஷன்களைப் போடுகிறோம், அரசாங்கமும் அவற்றில் சிலவற்றை கடைப்பிடிக் கின்றது. அவையெல்லம் அதிகபட்சம் அடையாளச் சின்னங்களாக, அதிகபட்சம் நோயின் புற அறிகுறி களுக்கு சிகிச்சை அளிப்பவையாக தெரிகின்றனவே அல்லாது அவை இக்கொடிய நோயை குணப் படுத்துகின்றனவா? நிச்சயமாக இல்லை! இந்நோய் ஆணின் அணுகுமுறை என்ற அம்சத்தில் இருக் கின்றது, அது மாற்றப்படவேண்டும். ஆனால் எப்படி செய்வது? குழந்தைகள் இளம் வயதினராக இருக்கும் பொழுதிலிருந்தே நாம் மாற்றவேண்டும், அவர்கள் சிந்தனையில் சரியான கருத்துக்களைப் புகுத்த வேண்டும். பெண்பிள்ளை என்றால் ஒருவகையில் அவள் தாழ்ந்தவள், அவள் அடக்கி ஒடுக்கப்பட வேண்டியவள் என்ற எண்ணத்தை சிந்தனை யிலிருந்து எடுக்கவேண்டும். குழந்தைகள் சிந்தனையில் இவ்வாறு மாற்றத்தை புகுத்தினால் இச்சிந்தனையை வாழ்நாள் முழுதும் நிலவும். பிறகு அக்குழந்தைகள் பெரியவர்களாகும் போது தங்களுக்கு வழங்கப்பட்ட இப்போதனையை அவர்கள் போற்ற இயலும். இவ்வாறு செய்யா விடில் இப்பிரச்சினைக்கு தீர்வு என்பது இல்லை. மக்கள் வருகைபுரிந்து, விவாதித்து கருத்துப் பரி மாற்றங்கள் செய்து கொள்ளக்கூடிய இத்தகைய மாநாடுகள் சமுதாயத்தில் சிந்தனைகளை தொகுத் துருவாக்க உதவும். இவை, நீரில் ஒரு கல் விழுந்தால் தோன்றிப் பரவும் அலைவட்டங்களைப் போன்ற விளைவை ஏற்படுத்தும். இங்கு வந்துள்ள ஒவ்வொரு

தொடர்ச்சி 2ம் பக்கம்

# புதுதில்லியில் நடைபெற்ற மாநாடு . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

பிரதிநிதியும், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒவ்வொரு இளைஞனும் தனது பகுதிக்குத் திரும்பிச் சென்று இதுபோன்ற சிந்தனையை பரப்பினால், அது அங்கும் இதுபோன்ற அலைவட்ட விளைவு உருவானால், பிறகு, பெண்கள் வன்முறையை சந்திக்காமல் வாழக்கூடிய ஒரு சமுதாயத்தை நாம் எண்ண முடிந்த ஒருநாளை நிச்சயமாக எதிர் பார்க்கலாம். வன்முறை எத்தனை பன்முகங்களைக் கொண்டுள்ளது? உடல்ரீதியான தாக்குதலில் துவங்கி உளரீதியான தாக்குதல் வரை, வன்முறைகள் ஒடுக்கு முறை, சித்திரவதைகள், ஈவ் டீசிங், அமில வீச்சு என பலப்பலவாக இருக்கின்றன.'

'நண்பர்களே, இந்த இயக்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதில் மார்தட்டிக்கொள்வதற்கு பிரத்தியேக மான உரிமைகளோ தகுதிகளோ என்னிடம் எதுவும் இல்லை. இதற்கென இத்தகைய அமைப்பை சமுதா யத்தில் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கும் தலைவர்களை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். அவர் களின் வழிகாட்டுதலில் ஒவ்வொரு மனிதனின் மனதிலும் பெண்கள் மீதான வன்முறை முடிவுக்கு வரும் என விழைந்து இக்கருத்துக்களை பரப்பி முன்னேறிச் செல்லுங்கள். இது கடினம் என்பதை நான் அறிவேன். என் வாழ்நாளில் இது நடக்காது எனினும் நாம் நம்பிக்கை இழக்க வேண்டாம். இங்கு பாடிய பாடலைப்போல) நாம் அனைத்து அடக்கு முறைகளையும் தூக்கியெறிய முடியும் என நிச்சய மாக நம்புகிறேன். 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். நீங்கள் இழப்பதற்கு ஏதுமில்லை, பிணைத் திருக்கும் சங்கிலியைத்தவிர' என மார்க்ஸ் கூறியதை நான் மீண்டும் கூற விரும்புகின்றேன். 'உலகப் பெண்டீரே ஒன்றுசேருங்கள். நீங்கள் இழப்பதற்கு ஏதுமில்லை, பிணைத்திருக்கும் சங்கிலியைத்தவிர'. மிக்க நன்றி. இந்த தேசிய மாநாட்டை துவக்கி வைப்பதில் நான் பேருவகை அடைகிறேன். ஏராள மான கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெறும் அவை திரும்பிச் சென்று சமுதாயத்தை மாற்ற விரும்புகிறேன். உதவும் என நான் நிச்சயமாக நம்புகிறேன். இச்சிறு உரையுடன் இம்மாநாட்டை நான் துவக்கி வைக் கிறேன். வாழ்த்துக்கள்' எனக்கூறி நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தனது உரையை முடித்தார்.

மாநாட்டின் சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜேந்திரசச்சார் உரையாற்றும்போது, 'டெல்லி யிலும் பல இடங்களிலும் போராட்டச் சூறாவளியை உருவாக்கிய வெட்கக் கேடான 'நிர்பயா' சம்பவம் நடந்து ஓராண்டிற்குப் பின் நாம் சந்திக்கின்றோம். பெண்களை அவ்வாறு நடத்தியமைக்கு இந்திய ஆண்கள் வருத்தப்பட்டது போன்று அன்று தோன் றியது. இத்தகைய சம்பவங்கள் என்றுமே நடைபெறாது என அன்று உணரப்பட்டது.



ஆனால் இதுபோன்ற சம்பவங்கள் நடை பெறுதல் நிற்கவில்லை. பிரச்சினை சட்டம் ஒழுங்கு தொடர்புடையதுமட்டுமல்ல, ஆணின் மனோ நிலை யுடன் தொடர்புடையதாகும். பெண்களுக்கு சம உரிமை வழங்க நாம் அஞ்சுகின்றோம். சாவித்திரி களல்ல திரௌபதிகள்தான் இந்தியாவில் தேவை என டாக்டர் லோகியா கூறுவதுண்டு. ஆணின் மேலாண்மைக்கு முழுமையாக சமர்ப்பிப்பதை சாவித்திரி பிரதிநிதித் துவப்படுத்தினார். அவளுக்கென்று மேலாண்மை ஒன்று கிடை யாது. ஆனால் திரௌபதி துணிந்து எதிர்ப்பவராவார். தன்னை சபைக்கு இழுத்து வந்தபோது தருமரைப் பார்த்து அவர் கேட்ட முதல் கேள்வியே 'என்னை பந்தயம் வைக்க உனக்கு உரிமை கொடுத்தது யார்? நான் எனக்கே சொந்தமான ஒரு தனி மனுஷி. என்னைப் பனையம் வைக்க நீ யார்?' என்பதுவே. அதற்கு எந்த விடையும் கிடைக்கவில்லை. ஆனால் இந்த எதிர்ப்புணர்வு இன்று பெண்களுக்கு ஊட்டப் படவில்லை. சமர்ப்பண உணர்வே எங்கும் நிலவு கிறது. இது ஆண்களிடம் மட்டுமல்ல பெண்களிடமும் இருக்கிறது. எனது காலத்தில் ஏராளமான மணப் பெண்கள் எரிப்பு சம்பவங்கள் நடந்ததுண்டு. மகனுடன் அவன் தாயும் மருமகளை உயிருடன் எரிப் பார்கள். இத்தகைய மனநிலை ஆண் பெண் இரு பாலரிடமும் நிலவியது என்பதை நான் குறிப்பிடு கிறேன். ஆனால் பெண்கள் பாதிப்புக்குள்ளாவ தால் இத்தகைய தாக்குதல்களுக்கெதிராக அவர்கள் முக்கிய பங்காற்றமுடியும்.

இந்த மாவ்லங்கர் அரங்கிற்கு நான் பல நிகழ்ச்சிகளுக்கு வந்திருக்கிறேன். ஆனால் இரண்டு முறைதான் இவ்வரங்கம் நிரம்பி வழிந்ததைப் பார்த் திருக்கிறேன். முதல் முறை கத்தர் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவின் போதாகும். இரண்டாவ தாக இம்முறையாகும். பெண்களுக்கு சம உரிமை கோரியும் அவர்கள் மீதான கொடுமைகளை எதிர்க்கவும் ஆண்களும் பெண்களும் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் கூடியிருக்கிறீர்கள். ஆக, நாம் இந்தப்பழமை மனநிலையிலிருந்து விடுபட வேண்டும். இன்றிலிருந்து இது துவங்கவேண்டும். விரும்பிய எதைவேண்டுமானாலும் நீங்கள் செய்ய முடியாது என்ற செய்தியை பெண்கள் விடுக்கும் தருணம் வந்துவிட்டதென நினைக்கிறேன். இத்தகைய தாக்குதல்கள் எதுவும் மிகச் சிறியவை கூட இனி பொறுத்துக்கொள்ளப்படமாட்டாது. 'நானும் மற்றெல்லோரையும்போல் ஒரு மனிதன் தான், எனக்கு உணர்வுகள் உண்டு, அபிலாசைகள் எதிர் பார்ப்புகள் நம்பிக்கைகள் உண்டு, அவற்றிற்காக நான் போராடுகிறேன் என்று தைரியமாகச் சொல் லுங்கள். இங்கு இருக்கும் சபையின் எண்ணிக்கை வலிமையைப் பார்க்கும்போது எனது வாழ்நாட் களுக்குள்ளேயே, அது அதிக ஆண்டுகள் இல்லாமல் இருந்தாலும்கூட பெண்கள் தங்கள் சமத்துவத்தை சமுதாயத்தில் பெற்றிடுவார்கள் என நிச்சயமாக நம்புகிறேன்' எனக் குறிப்பிட்டார்.

மற்றுமொரு சிறப்பு விருந்தினரான பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுரேஷ் ஹோஸ்பெட் அவர்கள், 'நாம் தற்போது டெல்லியில் புதிய ஆட்சி யின் கீழ் கூடியுள்ளோம். இங்கு ஒரு மாற்றம் இருக் குமா? புள்ளிவிவரங்களை சரியெனக் கொண்டால் இங்கு ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் ஒரு பலாத் காரம் நடக்கின்றது. இவ் வாறு 2010லும் இருந்தது. ஊடகங்களை சரியெனக் கொண்டால் தற்போது இது மேலும் அதிகரித் திருக்கும். ஆம் ஆத்மி கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு இதுதான் நிலைமையென்றால் ஒவ்வொரு 48 நிமிடத் திற்கும் அதாவது ஒவ்வொரு மணிக்கும் இரண்டு பாலியல் வன்கொடுமைகள் நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டும். புதிய அரசாங்கம் இதற்கு ஏதேனும் தீர்வைக் கொண்டிருக்கின்றதா?



மேலும், புள்ளி விவரங்களின்படி, 1970 முதல் 2010 வரை 40 ஆண்டுகளில் பாலியல் வன்முறைகள் 796% உயர்ந்திருக்கின்றன. இதுகுறித்து எந்த அரசாங்க மாவது எதையாவது செய்திருக்கின்றதா? பத்திரிகை செய்திகளின்படி இக்குற்ற எண்ணிக்கை இன்னமும் அதிகமாக இருக்கவேண்டும். சொல்லப்போனால் பாலியல் வன்முறை செய்திகளை அதிகமாக முந்தித் தருவது யார் என்பதில் செய்தித்தாள்களிடையே போட்டிகள் நிலவுவதுபோல் தோன்றுகிறது. சமுதா யத்தில் ஏன் இத்தகைய குற்றங்கள் நடைபெறு கின்றன என்பதுகுறித்து யாரும் சிந்திக்கவில்லை. நீங்கள் தினந்தோறும் பெண்களை பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தி அழித்துக் கொண்டிருந் தால் சமுதாயம் என்ன எதிர்காலத்தைக் கொண் டிருக்கும் என முன் பொருவர் கேள்வி எழுப்பி னார். எல்லா பெண் உரிமைகளும் மனித உரிமைகளே என்பதையும் எல்லா மனித உரிமைகளும் கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டியவையே என்பதையும் நாம் உணரவேண்டும். எல்லா மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளே. இதனை நமது அரசாங் கமும் சட்டமன்ற அமைப்புகளும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றன. பிரச்சினையின் சாராம்சம் இதுவே. ஜூலை 1993ல் நடைபெற்ற பெண்கள்மீதான பார பட்சங்களை அகற்று வதற்கான ஐநா மாநாட்டு (CEDAW) தீர்மானத்தை நாம் ஆமோதித்து ஏற்றுக் கொண்டுள்ளோம். அம்மாநாட்டு ஆய்வுகளை கூர்ந்து ஆய்வுசெய்தால் நாம் ஏன் இதுவரை தவறி விட்டோம் என்பது விளங்கும். அதன் முன்னுரையை நான் படிக்கிறேன்: '...வறுமை நிலவும் சூழ்நிலையில் பெண்களுக்கு உணவு, ஆரோக்கியம், கல்வி, வேலை வாய்ப்புக்கான பயிற்சியும் சந்தர்ப்பங்களும் கிடைத்தல் அரிதாகின்றன...'. கிட்டத்தட்ட 70% மக்கள் வறுமையில் வாழும் சூழலை நாம் கொண்டிருக் கிறோம். கிராமப்புறங்களிலும் குறிப்பாக நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் இதுவே நிலைமையாகும். பெண்களே வறுமையின் கொடுமைக்கு மோசமாக பாதிக்கப்படுகின்றனர், குற்றங்களுக்கும் பலியா கின்றனர். ஐநா தீர்மானத்தின் 2வது ஷரத்து முக்கிய மானதாகும். பெண்களுக்கெதிரான அனைத்து பாகுபாடுகளையும் 'காலதாமதமின்றி' நீக்கும் கடமை அரசிற்கு இருக்கின்றது. இருபதாண்டுகளாக இம்மாநாட்டு முடிவுகள் நம்மிடம் இருந்து கொண் டிருக்கின்றன. நாம் என்ன செய்திருக்கிறோம்? அதன் உட்பிரிவு என்ன சொல்கிறது?' பெண்களுக்கு எதிராக பாகுபாடு கொண்டிருக்கக்கூடிய தற்போது நிலவும் சட்டங்கள் முறைமைகள், வழக்கங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை மாற்றவேண்டும் அல்லது ஒழிக்கவேண்டும்'. ஷரத்து 5ன்படி 'பெண் களைத் தாழ்வாகக் கருதும் அடிப்படையைக் கொண்ட முன்னபிப்பிராயங்கள் மற்றும் வழக்கங் களை நீக்குவதற்கு' அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் நாம் இதுகுறித்து மிகமிகக் குறைவாகவே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பெண் களை தாய், மனைவி, மகள் என்ற பாத்திரங்களுடன் மட்டும் குறுக்கிப் பார்க்கும் பழைய முறையிலிருந்து மாறுபட்டு அவர்களை கண்ணியமும் மரியாதையும் உடைய மேலாண்மையுடையவர்களாக ஒருவர் பார்க்கத்தவறும் வரை, சூழ்நிலைமை நல்ல நிலைக்கு மாறாது. இந்தப் புரட்சிதான் தற்போது தேவையாகும்' என்று அவர் குறிப்பிட்டார்.

புகழ்பெற்ற நடிகையும் கலைஞரும் சமூக சேவகியுமான திருமதி தீப்தி நவல் பெண்கள் நிலைமை குறித்து தான் எழுதிய இரண்டு கவிதைகள் வாசித்தார். தான் ஏற்றுக் கொள்ளவிருக்கும் கதா பாத்திரத்திற்காக யதார்த் தத்தைப் பார்க்க ஒரு மன நோயாளிகள் காப்பகத் திற்குச் சென்றார். கண்ட காட்சிகள் பாதித்தால் உதித் தவையே அக்கவிதைகள் என்று அவர் குறிப்பிட் டார். பெண்கள் மீதான குற்றங்கள் என்ற இப்பிரச்சினையை முக்கியமாக கையிலெடுத்ததற்கு AIMSS, AIDYO, AIDSO ஆகிய மூன்று அமைப்புகளையும் அவர் பாராட்டினார்.



அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) பொதுச்செயலாளர் தோழர் எச் ஜி ஜெய லஷ்மி அவர்கள் நீதிபதி ஜே எஸ் வர்மா கமிஷனின் பரிந்துரைகளின் முக்கிய அம்சங்களை எடுத்துரைத் தார். எந்த அரசியல் கருத் தோட்டம் கொண்டதா யினும் சரி எல்லா அர சாங்கங்களும் பெண்கள் மீதான பாலியல் தாக்கு தல்கள் பிரச்சினையை போதிய அளவிற்குப் பார்க் கத்தவறிவிட்டனர் என்று அக்கமிஷன் குறிப்பிட்ட பல அம்சங்களை சுட்டிக் காட்டியதுடன் அதன் பரிந்துரைகளை எழுத்தின் உணர்விலும் செயல்வடிவிலும் அமுலாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்களுக்கு சம உரிமை வழங்குகிறோம் என்ற உறுதிமொழி களை அரசின் அனைத்து அங்கங்களும் எவ்வாறு வெவ்வேறு அளவில் அமுலாக்குவதில் தவறி விட்டன என்று கமிஷன் சுட்டிக்காட்டியதையும் எடுத்துரைத்தார். பாலின பண்புணர்வு (ஜெண்டர் சென்சிடிவிடி) குறித்து தொடர்ந்து கற்றுக் கொடுப்பதன் மூலம் நீதித்துறையினரின் மன நிலையையும் உயர்த்தவேண்டிய தேவை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.



'தி ஹிந்து' பத்திரிகையின் முதுநிலை உதவி ஆசிரியரான செல்வி ஆர்த்தி தர், இளைஞர்களை தவறாக வழிநடத்துவதில் சமூகத்தின்மீது சில தவறான எதிர்மறை விளைவுகளை சமூக ஊடகங்களும் ஏற்படுத்துகின்றன என்றார். வெறும் பணத்திற்காக பெண்களை மிகவும் அவலமாகச் சித்தரிக்கும் போக்கை அவர் கண்டித்தார்.

AIMSSன் அகில இந்தியத் தலைவர் தோழர் சாயா முகர்ஜி அவர்கள் தலைமையுரையாற்றினார். 'பெண்கள் ஆண்களுக்கு தாழ்ந்தவர் என்ற நிலையை உருவாக்கும் ஆணாதிக்க மனப்பான்மையே அனைத்து பிரச்சினை களுக்கும் ஆணிவேர். இப் பிரச்சினை, குற்றங்களை



தொடர்ச்சி 7ம் பக்கம்

# மோடியின் குஜராத்தில் வளர்ச்சிப் பெருவெள்ளம்!

உலகின் மாபெரும் ஜனநாயகமாம் இந்தியத் திருநாட்டின் அடுத்த பிரதம மந்திரிப் பதவியை அலங்கரிக்கப் போவது யார்? எனும் கேள்விக்கு விடைதெரியாது இந்நாட்டின் கோடானுகோடி மக்கள் தவித்துக்கொண்டிருக்க, இதோ வந்து விட்டார், கரைபுரண்டோடும் வளர்ச்சிப் பெருவெள்ளத்தை குஜராத் மக்களை அள்ளிப் பருகச்செய்த திருவாளர், பண்பாளர் நரேந்திர மோடி என அனுதினமும் ஊடகங்கள் கூவிக் கொண்டிருக்கின்றன. ஆனால் வெளியிடப் பட்டுள்ள விவரங்களும் அதிகாரப்பூர்வ அறிக்கைகளும் அரசாங்கப் புள்ளிவிவரங்களும் யதார்த்தநிலையும் வேறுமாதிரி செல்கின்றன. அவ்வாறான வளர்ச்சியை மறுக்கும் ஆதாரங்கள் சிலவற்றைக் கீழே காண்போம் மேற்கு அகமதாபாத்தில் வானளாவிய உயர்கட்டிடங்கள், பளபளக்கும் சாலைகள், ஜொலிக்கும் ஷாப்பிங் மால்கள் போன்றவைகளும் தலைநகர் காந்தி நகரில் பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) பெரும் அலுவலகங்களும் நிச்சயமாக வளர்ச்சியின் அறிகுறிகளாக இருக்கமுடியாது. கீழே நாம்காணும் ஆதாரங்கள் சிலவற்றை வைத்து உண்மையான வளர்ச்சி எது என்பதை அறியமுடியும்.

### வேலையின்மையும் தொழிலாளர்களின் நிலையும்

ஒளிரும் குஜராத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் *97,095* ஆக உயர்ந் திருக்கிறது. வேலையில்லாதோரின் எண்ணிக்கை, மாதந்தோறும் சராசரியாக *4000*க்கும்மேல் உயர்ந்துவருகிறது.

நகரத்திலும் கிராமத்திலும் தினக்கூலி தொழி லாளர்கள் தேசிய சராசரியைவிட குறைவான கூலியைப் பெறுகிறார்கள்.

ஏராளமான வரிதள்ளுபடிகள், இலவசநிலம், இலவசதண்ணீர், இலவசமின்சாரம், தங்கள் இனிய விருப்பத்திற்கிணங்க ஹையர் அண்ட் ஃபையர் முறையில் தொழிலாளர்களை நியமித்துக் கொள்ள முதலாளிகளுக்கு உரிமை உட்பட சலுகைமழை பொழியும் முழு மாநிலமே ஒரு 'சிறப்பு பொருளாதார மண்டலமாக' திகழ்கிறது. மாநிலத்தில் எந்த தொழிலாளர் போராட்டங்களும் பரவாதிருக்க உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது. மிகப்பெரும் கார்ப்பொரேட்டுகளுக்கு முறையற்ற சலுகை அளிக்கப்பட்டு சுமார் *580* கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதால் குஜராத் அரசாங்கத்தையும் மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களையும் தணிக்கை அறிக்கை (CAG) கடுமையாகக் கண்டித்துள்ளது.

### பொதுக்கடன்

குஜராத் அரசாங்கத்தின் பொதுக்கடன் ரூ.*1,24,580* கோடியைத் தாண்டியுள்ளது. அதாவது மாநிலத்தின் ஒவ்வொரு குடிமகன்மீதும் *24,704* ரூபாய் கடன்சுமை உள்ளது.

### மனித வளர்ச்சி

'இந்திய மாநில பட்டினி அட்டவணை *2008*'ன்படி *17* பெரிய மாநிலங்களில் அதிர்ச்சி தரும்வகையில் குஜராத் *13*வது இடத்தை எட்டியுள்ளது.

### அதிகரிக்கும் வறுமை

கடந்த *12* வருடங்களில் கிராமப்புற ஏழைக் குடும்பங்களின் எண்ணிக்கை *39.06* சதம் அதிகரித்துள்ளது. *2000*ஆம் ஆண்டு ஏப்ரலில் கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ளவர்கள் *23.29* லட்சமாக இருந்தனர். மாநில கிராமப்புற வளர்ச்சி கமிஷனர் அலுவலகம் தொடர்ச்சியாக திரட்டிய அறிக்கையின்படி ஜூன் *26, 2012*ம் ஆண்டு அவ்வெண்ணிக்கை *30.49* லட்சமாக உயர்ந்தது.

### பட்டினி மற்றும் சத்துணவுப் பற்றாக்குறை

ஒவ்வொரு மூன்றாவது குழந்தையும் எடைகுறைவானதாக உள்ளது. வேறுவார்த்தையில் கூறுவதானால் குஜராத்தின் *33%* குழந்தைகள் சத்துணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகின்றன. பட்டினி, சத்துணவுப்பற்றாக்குறை என்ற இரு வார்த்தைகளும் ஏறக்குறைய ஒரேபொருள் தரக்கூடியவையே. வார்த்தகமையமாக விளங்கக் கூடிய அகமதாபாத்தில் மாநிலத்திலேயே மிக அதிகமாக *85.000*த்திற்கு மேற்பட்ட குழந்தைகள் சத்துணவு பற்றாக்குறை அல்லது இவ்வகையில் மிகவும் பாதிக்கப்பட்ட ஐந்து மாநிலங்களில் குஜராத்தும் ஒன்று.

### நிலப்பறிப்பு மற்றும் விவசாயிகளை அப்புறப்படுத்துதல்

மேஹ்சானா மாவட்டத்தில் ஹன்சால்பூர் கிராமத்தில் இரண்டு திட்டங்கள் துவக்கப்பட உள்ளது.

ஹன்சால்பூர் கிராமத்திற்கருகில் நின்று கொண்டு, திகைப்புற்று பார்த்துக்கொண்டிருந்த சர்தான்பாய் பார்வாட் ஹாஜாபாய் என்பவர் "இந்த நிலத்தை எனது மூதாதையர் செப்பனிட்டனர். இது செழிப்பானதும் மிகநல்ல மேய்ச்சல் நிலமுமாகும். உபயோகமற்றநிலம் என்று ஏன் அறிவித்துள்ளார்கள்? பாருங்கள் எவ்வளவு பசுமையாக இருக்கிறது, எங்களிடமிருந்து இதை அவர்கள் பறித்துவிட்டால் எங்களின் வாழ் வாதாரம் அனைத்தையும் நாங்கள் இழந்துவிடு வோம், பின் வேறு என்ன செய்யப்போகிறோம் என்பதே எனக்கு தெரியவில்லை, எந்த இழப்பீடும் எங்களுக்கு கிடைக்காது. ஏனெனில் இந்த நிலம் எங்கள் பெயரில் இல்லை. இருந்தபோதிலும், வாடகை கொடுத்துக்கொண்டிருந்தோம். வேறு இடம் அளிக்கும் திட்டத்தில் எங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் மால்டாரிகள் நிலமற்ற ஏழைகள். எங்களை ஏறெடுத்துப் பார்ப்போர் எவருமில்லை" என கூறுகிறார். ஹன்சால்பூர் கிராமத்திற்கருகில் பீஜாராஜியில் மிகப்பரந்தநிலம் மாருதி சூசுகி ஆட்டொமொபைல் தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்டிருந்ததை விரைவில் அப்புறப்படுத்தப்படவுள்ள கிராம மக்கள் திடீரென அறிந்தனர். ஜமீன் அதிகார் அந்தோ லனைச் சேர்ந்த சாகர் ரபாரி என்ற அமைப்பினர் இண்டர்நெட்டில் எதையோ பார்த்துக் கொண் டிருந்தபோது, மண்டல்–பீஜாராஜி சிறப்பு முதலீட்டு பிராந்தியம் எனும் பெயரில் இத்திட்டமானது இன்னும் மிகப்பெரியது என்பதை தற்செயலாக அறிய நேர்ந்தது. *50,884* ஹெக்டேருக்கும் மேற் பட்டு பரந்துவிரிந்தது. இந்த எம்பிஎஸ்ஐஆர் (MBSIR) ஆல் மேஹ்சானா மாவட்டத்தில் *44* கிராமங்களும் *7,600* குடும்பங்களும் பாதிக்கப்பட்டவர்கள்.

### தற்கொலைகள்

இந்த ''வளர்ச்சிபெற்ற'' மோடியின் குஜராத்தில் கடந்த பத்து வருடங்களில் *37,206* பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இதில் *21,783* பேர் ஆண்கள், *15,423* பேர் பெண்களாவர். இருபாலரும் சரிசமமான விரக்தியடைந்துள்ளதை இது காண்பிக்கிறது. மேலும் *7,062* பேர் விவசாயி களும் *80* சதமானோர் *40* வயதுக்குட் பட்டோராவர். கடந்த மூன்று ஆண்டுகளில் *13,655* பேர் அதாவது ஒவ்வொரு நாளும் சராசரியாக *12* பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

### மேல்மட்டத்தில் உள்ள ஊழலும் குற்றங்களும்

மோடி அரசாங்கத்தின் ஒரு மூத்த அமைச்சரும் நீர் மற்றும் விவசாய அமைச்சர் பாபு பொக்காரியா மீது ரூ.*54* கோடி சட்ட விரோத சுண்ணாம்பு சுரங்க வழக்கு–*2006*ல் போர்பந்தர் கோர்ட்டால் *3* வருட சிறைதண்டனை விதிக்கப்பட்டார். ஆனால் அவர் அமைச்சராகவே தொடர்கிறார். டெண்டர்விடும் முறைகளுக்கு முன்பாகவே *58* நீர் நிலைகளில் மீன்பிடி ஒப்பந்தங்களுக்கு அனுமதி வழங்கியதில் முந்தைய மோடி அரசாங்கத்தின் புருஷோத்தம் சோலங்கி என்ற ஒரு இணை அமைச்சர்மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டது. *2002* படுகொலையின்போது தனது நரோடா பாட்டியா தொகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகளை கொடூர கொலை செய்தது மற்றும் பெரியளவிலான பாலியல் பலாத்காரத் திற்கு தலைமையேற்று நடத்தியதற்காக மாயாபென் கொட்னானி என்பவர்மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. அப்படிப்பட்டவர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் அமைச்ச ராக்கப்பட்டுள்ளார். *32* பிஜேபி எம்எல்ஏக்கள் கிரிமினல் வழக்குகளை சந்தித்து வருகின்றனர்.

### பெண்கள் மீதான குற்றங்கள்

பலாத்கார சம்பவங்கள் *7.7%* அதிகரித் துள்ளன. பெண்கள் மீதான பிற குற்றங்களும்கூட அதிகரித்துள்ளன. கணவன் மற்றும் கணவன் குடும்பத்தாரால் இழைக்கப்படும் கொடுமைகள் *10%*மும் பெண்கள் மீதான தாக்குதல்கள் *8.8%*மும் ஒட்டுமொத்தமாக *2012*ல் *9561* வழக்குகள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

"பலாத்காரமும் நானும்" என்ற விவாதத்தில் அகமதாபாதில் பல்வேறு பல்கலைகழகத்தைச் சேர்ந்த மாணவிகள் தாங்கள் இரவில் தனியாக செல்வதிலும் மற்ற பெண்களுடன் செல்வதிலும் எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்படுவதாக சொல்கின்றனர். குஜராத்தில் பலமுறை தான் பாலியல் தொந்தரவுகளை அனுபவித்ததாகவும் தற்போது தற்காப்பு வகுப்புகளுக்கு செல்ல பெண்களுக்கு அறிவுரை கூறி வருவதாகவும் ஒரு பெண் கூறுகிறார். இவ்விவாதத்திற்கு வந்த பெற்றோர்களில் பலர் அகமதாபாத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். குஜராத் எப்போதும் இவ்வாறு இருந்ததில்லை, தற்போது நிலைமை மோசமாகி வருவதாகவும் அவர்கள் கூறினர்.

ஒரு *12* வருட காலத்திற்குள்ளாகவே குஜராத்தின் *12* மாவட்டங்களிலிருந்து பெண்களுக்கெதிரான *50,000* வன்முறை வழக்குகள் பற்றிய தகவல்கள் வந்திருக்கின்றன. *640* வரதட்சணை மரணம், *1,443* பலாத்கார வழக்குகள், கணவன் மற்றும் அவர் குடும்பத்தின ரால் கொடுமைப்படுத்தப்பட்ட *14,998* வழக்குகள், *7894* பெண் தற்கொலைகள் மற்றும் *3006* பெண் கடத்தல் போன்றவை இந்த காலகட்டத்தில் இந்த மாவட்டங்களில் மட்டும் நடந்துள்ளன.

### அடிப்படை வசதிகள்

கிராமப்புறத்தில் ஐந்திற்கு ஒரு வீட்டில் குடிநீர், மின்சாரம், கழிப்பிடம் போன்ற மூன்று அடிப்படை வசதிகளையும் பெற்றிருக்கவில்லை. *18%* மட்டுமே இம்மூன்றையும் பெற்றிருக்கின்றனர். மாநிலத்தில் *52* லட்சம் வீடுகளில் கழிப்பிடவசதி இல்லை. *64* லட்சம் மக்களுக்கு கழிப்பிடவசதி இல்லை. *49* லட்சம்பேர் கழிப்பிடமாகத் திறந்தவெளியை பயன்படுத்தி வருகின்றனர். மனிதக்கழிவை அகற்றுவோரை நியமிப்போருக்கு தண்டனைவழங்க வகைசெய்யும் *1993*ம் வருடத்திய சட்டத்தையும் மீறி *126* இடங்களில் அகமதாபாத் முனிசிபல் கார்ப்பொரேஷனானது மனிதகழிவை அகற்ற மனிதர்களை பயன்படுத்தி வருவதை சமீபத்திய ஆய்வொன்று கண்டுபிடித்திருக்கிறது.

### சிறுபான்மையினர் மற்றும் மதசார்பற்ற மக்களின் துயரநிலையும் பாதுகாப்பின்மையும்

குஜராத் அல்லது நரேந்திர மோடியைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை சொல்ல குஜராத் முஸ்லீம்கள் எப்போதும் அஞ்சுகிறார்கள். ஒவ்வொருவருடமும் மழைக்காலத்தில் குப்பை மேட்டிலிருந்து நீர்வழிந்தோடி மக்கள் குடியிருப்புக்களில் கலக்கிறது. இதன்விளைவாக குழந்தைகள் அங்கஹுனத்துடன் வளர்கிறார்கள். "ஆம் இறந்த உடல்கள் எல்லாநேரங்களிலும் நாங்கள் பார்க்கிறோம்," என ஒரு நேர்காணலின் போது *12* வயது சிறுவன் தெரிவித்தான்.

டெல்லியிலிருந்துவந்த நிடா யாமின் என்ற (IIM) ஆய்வாளர் முஸ்லீமாக இருப்பதால் வீடு தர மறுக்கப்பட்டார். பின் சில மாதங்களுக்குப்பின் அகமதாபாத்தைவிட்டு வெளியேறிவிட்டார். "இந்த இடம், எங்களுக்கானதல்ல" எனக்கூறி வருந்தினார்.

*1992* மற்றும் *2002* கலவரத்தின் போது இடமாற்றத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட அகமதா பாத்தைச் சேர்ந்த *24*வயது ஜிலா என்பவர் குஜராத்தில் தன்னை முஸ்லீமாக எங்கு பார்க்க வில்லையோ அவ்விடத்தில் வாழ விரும்புவதாக கூறுகிறார்.

இந்து மற்றும் முஸ்லீம் வகுப்புவாதத்தை எதிர்த்துவரும் மதச்சார்பற்ற கிரண் அங்கிள் என்ற வழக்கறிஞர் *2002* கலவரத்திற்குப்பின் முஸ்லீம்களுக்கு ஆதரவாக மிக ஆவேசமாக பேசுவதன் காரணமாக தனது குடும்பத்திலிருந்தே தள்ளிவைக்கப்பட்டுள்ளார்.

அசைவ உணவுகளை பரிமாறுவதற்காகவும் ஒரு 'கெட்ட பிராமணனாக' இருப்பதற்காகவும் தினமும் யாராவது தனது கடைக்குவந்து தன்னை திட்டுவதாக ஹேமன்ஸ்சு அங்கிள் என்பவர் கூறுகிறார். நான் எனது சிறுபிராயத்தில் பார்த்த அந்த குஜராத் அல்ல இது, அப்போது அது சகிப்புத்தன்மை கொண்டதாக இருந்தது என வருத்தத்துடன் தெரிவிக்கிறார்.

*(Sources :*
*The National Crime Bureau Report*
*Indian Express, 28-03-2008, 13-02-2013*
*Eastern Crescent, 28-09-2013, Counterview.org, 27-06-2013*
*Times of India, 06-04-13, 25-06-13, 07-10-13*
*Observer Research Foundation, 06-04-13, Outlook, 21-10-13*
*Frontline, 06-09-13, Gujarat Global, 16-10-13)*

# நவீன வடிவங்களில் கொத்தடிமை மற்றும் கட்டாய உழைப்பு - கூலி அடிமைத்தனத்தின் கொடூரமான வெளிப்பாடு

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்த சட்டவிரோத கும்பலால் நடத்தமுடியும்? என்பதுதான் நமது கேள்வி. நாம் இதற்கு முன்பு வரலாற்றில் அறிந்ததைப் போல கொத்தடிமைமுறை என்பது நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை முறையின் பிரத்யேகமான அம்சம் மட்டுமல்ல மாறாக அழுகிச் சீரழிந்து வரும் இன்றைய முதலாளித்துவத்திலும் அது இருந்து வருகிறது. ஆனால் சற்றே மாறுபட்ட வடிவத்தில் அதிகாரவர்க்கத்தின் துணையோடு இது நடைபெற்றுவருகின்றது. ஆனால், இந்த கொத்தடிமைக் கட்டாய உழைப்பு தற்போது அதிநவீன சௌகரியங்கள் கொண்ட தகவல் தொழில்நுட்பத் துறைகளிலும் கூட விரிந்து பரவி வருகின்றது. ஒவ்வொரு நாளும் நிலைமைகள் மேன்மேலும் மோசமான நிலைக்கு நகர்கின்றன. எனவே நற்சிந்தனை கொண்டவர்கள் இந்த கொடூரமான நடைமுறைகள் குறித்து அறிந்தும் உணர்ந்தும் இருப்பதோடு இதற்கான அடிப்படைக் காரணகாரியங்களைத் தெரிந்து அதனைத் தீர்க்கவும் முயலவேண்டும்.

## கொத்தடிமை உழைப்பு மற்றும் கட்டாய உழைப்பு

கொத்தடிமை உழைப்பு என்பது ஒரு வகையான கட்டாய உழைப்பாகும். வலுக்கட்டாயமான உழைப்பு நிலையில் அவ்வாறு உழைப்பில் ஈடுபடுத்தப்படுபவர்கள் வன்முறை நிகழ்த்தப்படும் என்ற பயத்திலோ அல்லது வேறுவிதமான தண்டனைகள் வழங்கப்படும் என்ற பயத்திலோ தங்களின் சொந்த விருப்பத்திற்கு விரோதமாக வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அவர்களது சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது உடைமையாளர்களின் ஆதிக்கம் திணிக்கப்படுகிறது. வீட்டு வேலைகள் விவசாய வேலைகள், ஆலைத் தொழில்கள், கட்டிடப் பாது காவல்பணிகள், மற்றும் உணவகங்களில் பல்வேறு பிற சேவைத் துறைகளில் இந்த கட்டாய பலவந்தமான உழைப்பு பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து வருவதை நிச்சயமாகக் குறிப்பிடலாம்.

கடன் அடமானம் மற்றும் இடைத்தரகர் ஏஜெண்டுகளைப் பயன்படுத்தி முன்பணம் வழங்கி தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி மிக மோசமான பணியிடங்களில் வேலைநேரக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றியும், எந்தவித ஊதியமும் வழங்காமலும் அற்பகூலிக்கு வேலை செய்யக் கட்டாயப்படுத்துவது கட்டாய உழைப்பின் பிரதான வடிவமாகும். நேஷனல் கன்சார்ட்டியம் ஆஃப் சிவில் சொசைட்டி ஆர்கனைசேசன்ஸ் (National Consortium of Civil Societs) என்ற அமைப்பு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கைபற்றி ஒரு ஆவணப்படம் தயாரித்தனர். இதில் எவ்வாறு செங்கல் சூளைகளில் பணிப்பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் தாங்கமுடியாதத் தட்பவெப்ப நிலையில் கூடாரங்களில் கழிப்பறைவசதிகள் கூட இல்லாத இடங்களில் வசித்து வருகிறார்கள் என்ற அவலத்தை மிகச்சரியாகச் சித்தரித்திருந்தது. இவ்வாறான இடங்கள்தான் அளவிடமுடியாத துன்பங்கள் மற்றும் மரணம் விளைவிக்கும் கொடிய நோய்கள் பரவும் இடங்களாக இருந்துவருகின்றன. இங்குதான் பாலியல் ரீதியான சுரண்டல்களும் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன. இம்மாதிரியான கொத்தடிமைச் சிறைகளிலிருந்து தப்பித்துச் செல்ல முயல்பவர்களுக்கு தற்போது ஒடிசாவில் எப்படி கைகள் வெட்டப்பட்டனவோ அதுபோன்ற தண்டனைகளும் வழங்கப்பட்டுவருகின்றன.

மேலும் செங்கல் சூளைத் தொழிலில் குழந்தைகள் அதிக அளவில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் செங்களுக்கு மண் அறுக்கும் வேலையில் ஈடுபடும்போது குனிந்து வேலைசெய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் உயரம் குறைவு, மேலும் சூளையில் செங்கல் அடுக்குவதற்கு பெரியவர்களைவிட சிறுவர்களே வசதிப்படுவர். ஏனெனில், எவ்வித பாதிப்புமின்றி அவர்கள் சூளையின் மீது ஏறிநின்று வேலை செய்யலாம் அதனால்தான் இந்த காண்ட்ராக்ட் மாஃபியாக்கள் இந்த செங்கல் சூளை யூனிட்டுகளில் வேலைசெய்வதற்கு ஆண் பெண்கள் இரண்டு குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்தை தேர்வு செய்ய அதிகம் விரும்புகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாத 70% மக்கள் வாழும் நாட்டில், ஒவ்வொருநாளும் பட்டினியிலும் நோயிலும் லட்சக்கணக்கான மக்கள் மடிந்துவரும் ஒரு நாட்டில், வெறும் 500 ரூபாய்க்கு தன் மகளை விலைக்கு விற்கும் தந்தையர்கள் உள்ள ஒரு நாட்டில் ஒரு தாய் வாங்கிய கடனை அடைக்க வழியின்றி தான் பெற்ற குழந்தையையும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்கின்ற நிலை இருந்துவரும் நாட்டில் இம்மாதிரியான சிறு தொழில் யூனிட்டுகள் வேலைதருவதாக ஆசைகாட்டி அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதை அரசாங்கமும் நிர்வாகமும் வெறுமனே இவற்றிற்கு துணைபோகும் பார்வையாளர்களாக நின்று வேடிக்கை பார்த்து வருகிறது. மேலும் கடன், கட்டாய உழைப்பு மற்றும் கொத்தடிமை உழைப்பு ஆகியவற்றைத் தடைசெய்யக்கோரும் இந்தியக் கொத்தடிமைமுறை ஒழிப்புச் சட்டம் – 1976 மற்ற பிற அரசாங்கச் சட்ட ஷரத்துக்களைப் போலவே எவ்வித பயனும் இன்றி சட்டப்புத்தகங்களுக்கிடையில் அடைபட்டுக் கிடக்கிறது. இதில் மிகவும் கண்டனத்திற்குரிய விஷயம் என்னவெனில் குளோபல் ஸ்லேவரி இன்டெக்ஸ்–2013ன் படி உலகத்தில் மொத்த நவீனக் கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பாதிக்குமேற்பட்ட சதவீதம் இந்தியாவில் இருக்கின்றனர்.

## முதலாளித்துவ உலகமயத்தின் கீழ் அடிமை உழைப்பு மற்றும் கொத்தடிமை உழைப்பின் வடிவங்கள்

முதலாளித்துவ உடைமையாளர்களின் கைகளில் தொழிலாளர்கள் கூலி அடிமைகளாக இருக்கின்ற மூலதனத்தின் ஆட்சியில் நிராதரவான அடித்தட்டுமக்கள் எப்படியேனும் வாழ்வதற்கான வழிகளைக் கண்மூடித்தனமாக தேடிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி முதலாளித்துவ உடைமையாளர்கள் தொழிலாளர்கள உபரி உழைப்பை லாபமாக அபகரித்து அதிகபட்ச லாபமடைவது இந்தியாவில் மட்டும் தனியாக நடைபெறும் நிகழ்வுப்போக்கல்ல. வேதனை மிகுந்த இந்த நிகழ்வுப் போக்கு இன்று உலகமுழுவதிலும் இருக்கின்ற முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில் காணப்படும் பொதுப்படையான காட்சியே ஆகும். ஆனால் சோவியத் யூனியனிலும் முன்னாள் சோசலிச முகாமின் உறுப்பு நாடுகளிலும் சோசலிசம் வீழ்ச்சியுற்றபிறகு எங்கெல்லாம் இந்த முதலாளித்துவ உலகமயக் கொள்கைகள் அமலாக்கப்பட்டனவோ அங்கெல்லாம் இது மிகக் கொடூரமானதாகவும் அபாயகரமான ஒன்றாகவும் மாறிவிட்டது. எதிர்ப்பும் தடுப்புமற்ற கட்டவிழ்த்துவிடபட்ட நிலையில் இந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் தங்களின் உண்மை முகத்தை வெளிக்காட்டுகின்றன.

இந்த ஒருமுனை உலகத்தினை தங்களின் சொந்தச் சுரண்டலுக்கான ராஜாங்கமாக திறந்துவிடப்பட்ட களமாக அவர்கள் கருதுகிறார்கள் மிகக் கொடூரமாகவும் ஈவிரக்கமற்றும் அவர்கள் தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குகிறார்கள். தொழிலாளர்கள் மற்றும் அல்லற்படும் வெகுஜனங்களின் வாழும் உரிமை உள்ளிட்ட போராடிப்பெற்ற உரிமைகள் அனைத்தையும் அவர்கள் காலிலிட்டு மிதிக்கிறார்கள். அனைத்து சட்ட ஷரத்துகளையும் மீறுகிறார்கள். அமலில் இருக்கும் சட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்படிய மறுக்கிறார்கள் அனைத்து நிறுவப்பட்ட மரபுகளையும், நடைமுறைகளையும் வழிமுறைகளையும் மீறுகிறார்கள். அதன் மூலம் அவர்கள் சுரண்டப்படும் மக்களின் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் ஒட்ட உறிஞ்சி லாபமடைய வழியமைக்கிறார்கள்.

மிகத் தீவிரமாக அதிகரித்துவரும் அடிமைகளுக்கு நிகரான கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அதனைத் தொடர்ந்து வெளிப்பட்டு வரும் காட்டுமிராண்டித்தனமான நிகழ்வுகள் இதற்கு வெட்ட வெளிச்சமான சாட்சிகளாக முன்நிற்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக உலகமயம் என்பதே முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகள் உலகம் முழுவதிலும் தங்களின் தீவிரமான சந்தை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கையாகும். ஆனால் அனைத்து விதமான தில்லுமுல்லுகள் முறைகேடுகள், தகிடுதித்தங்களுக்குப் பின்னரும் கூட அவர்கள் மிகுந்த பிரஸ்தாபத்துடன் கொண்டுவந்த இந்த உலகமயத்தினால் சந்தை நெருக்கடியிலிருந்து மீளமுடியவில்லை என்ற யதார்த்தத்தை முதலாளித்துவ வாதிகளால்கூட மறைக்கமுடியவில்லை. மாறாக இந்த சந்தைநெருக்கடி மேலும் பலமடங்கு அதிகரித்து வருகின்றது. இது ஏதோ இவர்கள் சொல்வதைப் போல கொள்கை முடக்கமோ அல்லது பொருளாதார ஒழுங்குமுறையில் ஏற்பட்ட தவறோ அல்லது இயற்கைச் சீற்றத்தினாலோ அல்ல. மாறாக வெகுஜனங்களை அப்பட்டமான வறுமையில் தள்ளும் அதேநேரத்தில் ஆளும் முதலாளிவர்க்கத்திற்கு அதிகபட்ச லாபத்தை உத்திரவாதப்படுத்துகின்ற முதலாளித்துவப் பொருளாதார விதியின் செயல்பாடு காரணமாகவே இவை நிகழ்கின்றன. வெகுஜனங்கள் பெருமளவிற்கு ஏழ்மைநிலைக்குத் தள்ளப்படுவதுதான் மக்களின் வாங்கும் சக்தியைப் பெருமளவிற்குப் பறித்துவிடுகிறது. ஆகையினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்குவோர் இல்லாமல் அப்படியே கிடக்கிறது. ஆகவே அதீத உற்பத்தி மற்றும் தேக்கம் பீடித்துக் கொள்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு எவ்வித கிராக்கியும் இல்லாததைக் கண்டு அதிகபட்ச லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உற்பத்தியை நடத்துகின்ற முதலாளிகள் தங்களின் உற்பத்தியை நிறுத்துகிறார்கள். கோடிக்கணக்கான மக்கள் ஏற்கனவே வறுமையிலும் வேலையின்மையிலும் துன்புற்றுவரும் நிலையில் முதலாளிகள் ஆலைகளை மூடுகிறார்கள் தொழிலாளர்களை வேலையிலிருந்து வெளியேற்றுகிறார்கள்.

மேலும் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருட்கள் இல்லாததாலோ அல்லது பலன்தரும் வாய்ப்புகள் தொழில்துறையில் இல்லாததாலோ இதை அவர்கள் செய்யவில்லை. மாறாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தையில்விற்று அதிகபட்ச லாபமீட்ட முடியாத காரணத்தினால் இவ்வாறு செய்கிறார்கள். இவ்வாறாக வேலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் பட்டாளம் தங்களிடம் கொஞ்சம் நஞ்சம் இருந்த வாங்கும் சக்தியையும் கூட இழந்துவிடுகிறது. இதனால் முதலாளிகளுக்கான சந்தை மேலும் சுருங்கி இதனால் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டையும் வேலையின்மைப் பிரச்சினை கவ்விப்பிடிக்கிறது.

இவ்வாறு சுருங்கிய சந்தையில் தங்களுக்கான பங்கிற்காக உள்நாட்டு மற்றும் அந்நிய முதலாளிகளுக்கிடையே போட்டி தீவிரமடைகிறது. தங்களுக்கிடையே போட்டியிடும் திறனை அதிகரிப்பதற்காக கார்ப்பொரேட் மற்றும் பெரும் வியாபார முதலாளிகள் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கான உற்பத்தி விலையைக் குறைக்க முயல்கிறார்கள்.

இவ்வாறு உற்பத்திப் பொருட்களின் அடக்க விலையைக் குறைப்பதற்கான பல்வேறு வழிமுறைகளில் அவர்களுக்கு மிகவும் சுலபமான வழி உழைப்பின் விலையின் மதிப்பைக் குறைப்பது தான். இதற்காக அவர்களுக்கு அனைத்து சுதந்திரமும் தேவைப்படுகிறது. உழைப்புச் சந்தையின் கட்டுப்பாடுகளை முழுவதுமாகத் தளர்த்தும் போது மட்டுமே இது அவர்களுக்கு சாத்தியப்படமுடியும். அதற்கு அர்த்தம் படிப்படியாகப் போராடிப் பெற்ற தொழிலாளர்களின் ஜனநாயக தொழிற்சங்க உரிமைகளையும் கூட்டுபேர உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் வெட்டிக்குறைத்து முதலாளிகளுக்கு தங்குதடையற்ற உரிமைகள் வழங்குவதாகும். இதைப்பயன்படுத்தி அவர்கள் வேலைநேரத்தைக் குறைப்பது, கூலியைக் குறைப்பது மற்றும் பிற பணிநிபந்தனைகள் முறைமைகளையும் தீர்மானிப்பார்கள். மிகச் சரியாக சீரழிவுமிகுந்த உலகமய தாராளமயம் இதைத்தான் செய்யச் சொல்லி ஆலோசனை வழங்குகிறது.

மேலும் முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தங்களின் அடிவருடி அரசாங்கங்கள் மூலமாக சீர்திருத்தம் என்ற பெயரில் இதைத்தான் அமல்படுத்தி வருகிறார்கள். தொழிலாளர்களை நிரந்தர அடிப்படையில் நியாயமான கூலி அடிப்படையில் வேலைக்கமர்த்துவதற்குப் பதிலாக தற்போது ஒப்பந்த அடிப்படையில் குறைந்த கூலிக்கு அமர்த்துவதற்கும் மற்றும் அவ்வாறான பணி நியமனங்களையும்கூட வெளி ஏஜெண்டுகள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமும் அல்லது முதலாளித்துவ அமைப்பு முறையின் பிரிக்கவியலாத அங்கமாக விளங்கக்கூடிய நிர்வாக ஒட்டுண்ணிகள் மூலமும் நியமனம் செய்யும் முறைக்கு அழுத்தம் தரப்படுகிறது. இது வேறொன்றுமல்ல மிகவும் கொட்டிமுழக்கப்படும் கேடுகெட்ட வழிமுறையான அவுட்சோர்சிங் வழிமுறைதான். தான் பலனடையும் தொழிலாளர் சக்தியின் மீது முதலாளிகள் கொண்டிருக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புணர்விலிருந்து அவர்களை விடுவிப்பதற்காகத்தான் இவ்வாறு செய்யப்படுகிறது.

தற்போது எங்கு நோக்கினும் காண்ட்ராக்டர்களின் காட்சியாக இருந்துவருகிறது. இந்த பணியாட்களை சப்ளை செய்வோர் அல்லது காண்ட்ராக்டர்கள் எனப்படுவோர் பல்வேறுபட்ட தொழிற்திறன் பெற்ற மற்றும் தொழிற்திறனற்ற தொழிலாளர்கள் முதலாளிக்கு வழங்குவதற்குத்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# சட்டவிரோதமாகக்கடத்தப்பட்ட இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் கொத்தடிமையாகும் அபாயம் அதிகமுள்ளது

*4ம் பக்கத் தொடர்ச்சி*

தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்கிறார்கள். டெண்டரில் யார் குறைந்த விலை கோருகிறார்களோ அவர்களுக்கு காண்ட்ராக்ட் வழங்கப்படுகிறது. காண்ட்ராக்டைப் பெறுகின்ற ஒப்பந்தக்காரர்கள் அவர்கள் ஈடுபடுத்தப் போகின்ற கூலி உழைப்பாளர்கள் மலிவு விலைக்கு உழைப்பவர்களாகவும் அதிகநேரம் உழைப்பவர்களாகவும் இருக்கும்படியாக இருப்பதை அவர்கள் உறுதி செய்து கொள்கிறார்கள். மேலும் ஒப்பந்தப்பணியில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்கள் எந்தவிதமான அடிப்படைத் தேவைகளையும் நிறைவுசெய்யவோ எந்தப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவோ வேண்டியதில்லை. ஆகவே முதற்கட்ட முதலாளியோ அல்லது பிற வியாபார நிறுவனங்களோ அல்லது இந்தக் கடைநிலை ஒப்பந்தக்காரர்களோ சப்ளை செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு காலம் பணி இடத்தில் வேலை வழங்கப்படும், எவ்வளவு கூலி வழங்கப்படும் போன்ற எதற்கும் பொறுப்பேற்பதில்லை. இன்னும்சொன்னால் அரசாங்கம் நிர்ணயித்த குறைந்துபட்சக் கூலியைக் கூட அவர்கள் வழங்குவதில்லை. அவர்கள் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் முதலாளிகள் பணியின்போது இறந்து விட்டாலும் கூட இந்த ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் உயிருக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதைப்போல அவற்றை அலட்சியப் படுத்திவிடுகிறார்கள். ஆனால் குறைந்த கூலிக்கு வேலையாட்கள் வேண்டும் என்ற முதலாளியின் தேவைக்குத் தீனிபோடுவதற்கு எல்லாவிதமான அடக்குமுறை வழிகளையும் பயன்படுத்தி அதாவது கொத்தடிமை உழைப்பையும் கூட அவர்கள் கட்டாயப்படுத்தத் தயங்குவதில்லை. பிற அனைத்து வழிமுறைகளிலும் தற்போது புலம்பெயர்ந்த தொழிலாளர்களை விலைக்கு வாங்கி வேலைக்கமர்த்துவது நமது நாட்டில் மட்டுமல்ல, அனைத்து நாடுகளிலும் அதிகரித்து வருகிறது. இவ்வாறாகத்தான் மிகவும் புகழ்ந்துரைக்கப்பட்ட உலகமயம் உலகம்தழுவிய போட்டியையும் காண்ட்ராக்டர்களையும் அதன் மோசடி வலைப்பின்னலின் உள்வட்டத்திற்குள் நுழைத்துவிட்டிருக்கிறது.

### சீரழிந்த முதலாளித்துவத்தில் கொத்தடிமை மற்றும் அடிமை உழைப்பு பல்வேறுபட்ட வடிவங்களையும் அளவினையும் எட்டியிருக்கிறது

இதற்கு முன்னர் அறிந்திருப்பது போலவே, இந்த பல்வேறுபட்ட கட்டாய மற்றும் கொத்தடிமை உழைப்பு என்பது நிலவும் முதலாளித்துவ கால கட்டத்தில் நடைபெறுகின்ற அடிமைத்தனமே ஆகும். மாபெரும் தலைவர் மார்க்ஸ் மிகச்சரியாகவே குறிப்பிட்ட கூலிஅடிமைத்தனம் தற்போது அதன் உச்சகட்ட நிலையில் வெளிப்படுகிறது. பொதுவாக அடிமைத்தனம் என்பது ஒரு அமைப்பு முறை என்ற அடிப்படையில் அங்கே மக்கள் விற்கப் படவும் முடிந்த ஒரு பொருளாக இருப்பதோடு, கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்படுவர் என்று வரையறுக்கப்படுகிறது. பழங்காலத்திய ஆண்டான் அடிமைச் சமுதாய அமைப்பு முறை குறித்து ஏங்கல்ஸ் அவர்கள் குறிப்பிடுவது போல "முதன் முதலாகச் சமூகம் ஆண்டான்கள் அடிமைகள், சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் என இரு வர்க்கங்களாகப் பிளவுண்டது. அடிமைகள் என்பவர்கள் சமுதாயத்தில் செல்வத்தை உருவாக்குபவர்களாக இருக்கின்றார்கள் அவர்கள் தங்களின் பிறப்பிலிருந்தே அடிமையாக்கப்பட்ட காலத்திலிருந்தே அல்லது பிறரிடமிருந்து வாங்கப்பட்ட காலத்திலிருந்தே அவர்கள் விருப்பத்திற்கு விரோதமாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் எஜமானர்களிடமிருந்து விலகிச் செல்வதற்கோ அல்லது வேலை செய்ய மறுப்பதற்கோ அல்லது ஏதேனும் ஊதியம் பெறுவதற்கான தங்களின் உரிமை பறிக்கப்பட்ட நிலையில்தான் இருந்தார்கள். இந்தக் காட்டுமிராண்டித்தனமான அடிமை சமுதாய முறைக்கு எதிரான நீண்ட நெடிய போராட்டத்தில் இந்த அடிமைகள் இந்த பழங்காலத்திய அடிமைகள் எஜமானர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆனால் அடிமை சமுதாயத்தில் அடிமைகள் கால் நடைகளுக்கும் ஆடுமாடுகளுக்கும் இணையாக பார்க்கப்பட்ட மாதிரியல்லாமல் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து அவர்கள் மனிதர்களென்ற அங்கீகாரம் பெற்று வாழும் உரிமை பெற்றனர். மதநெறி போதனையின் சாராம்சத்தில் மக்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லப்பட்டது. ஆனால் யதார்த்தத்தில் நிலப்பிரபுக்கள் கடவுளின் முன்னுரிமையையும் சலுகையும் பெற்று இல்லாதவர்களையும் வஞ்சிக்கப் பட்டவர்களையும் ஆளும் உரிமை பெற்றவர்களானார்கள். சுரண்டலின் தன்மை மாறியிருக்கிறதேயன்றி மனிதனை மனிதன் சுரண்டுவது மாறவில்லை ஆகவே தொழிலாளர்கள் அல்லது உற்பத்தி சக்தி எனக் கருதப்படும் உழைப்பாளி மக்கள் புதிதாக உருவாகி எழுந்துள்ள சுரண்டும் வர்க்கத்தின் கீழ் அடிமைப்படுத்தப்பட்ட பிரஜைகளாகவும் பண்ணையடிமைகளாகவும் ஆனார்கள். ஆனால் அடிமைத்தனம் மற்றொரு வடிவத்தில் மேலும் தொடர்ந்தது. கடன்பட்ட பண்ணையடிமை தன் கடனை அடைக்க முடியாத நிலையில் தன் கடன் தீர்க்கப்படுகின்றவரை அதற்கு அடமானமாக தன் குடும்பத்தினரை பிணையாக வைக்கின்ற அடிமைத்தனம் தொடர்ந்தது. கடன் கொடுத்தவர் அல்லது நிலப்பிரபு அவ்விதம் அடமானம் வைக்கப்பட்டவரை எப்படிவேண்டுமானாலும் சுரண்டி அவரது உழைப்பை அபகரித்துக் கொள்ளலாம்.

பின்பு நிலப்பிரபுத்துவம் பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியினால் தூக்கியெறியப்பட்டபோது அன்றைய வளரும் சக்தியாக எழுந்து நின்ற பூர்ஷுவாக்கள் அவர்களின் வர்க்க தேவையின் காரணமாக சுயதேவையை மட்டும் பூர்த்தி செய்த நிலையில் இருந்த வட்டார நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தின் கட்டுத் தளையிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்காக அறைகூவல் விடுத்தார்கள்.

அவ்வாறு விடுதலை பெறுவதன் மூலம் அவர்கள் புதிதாக உருவாகி எழுந்துள்ள முதலாளித்துவ கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்ந்தெழுகின்ற தொழிற்சாலைகளை இயக்குவதற்கு அவசியமான உற்பத்தி சக்தியில் ஒரு தொழிலாளியாக அவர்கள் வேலை செய்யமுடியும். ஆகையினால்தான் தனிநபர் சுதந்திரம் சமத்துவம், ஆகியவற்றிற்கான அறைகூவல் விடுக்கப்பட்டது. அன்றைய காலத்தின் நிலைமைகளையும், தேவைகளையும் பொருத்தமட்டில் அவை அனைத்தும் முற்போக்கானவை என்பதில் துளியும் சந்தேகமில்லை. உற்பத்தி சக்தியில் முன்பு நிலவிவந்த அடிமைமுறையின் பழைய விலங்குகள் அடித்துடைக்கப்பட்டன என்பது உண்மைதான், ஆயினும் வர்க்கச் சுரண்டல் ஒழிக்கப் பட்டுவிடவில்லை. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஆளும் நிலப்பிரபுக்களுக்கும் ஆளப்படும் பண்ணையடிமைகளுக்கும் இடையில் நிலவிவந்த பிரதான முரண்பாட்டிற்குப் பதிலாக முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான முரண்பாடு புதிய வடிவமெடுத்தது. உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடு அதாவது உற்பத்தி கருவிகளை தன்வசப்படுத்திக் கொண்ட முதலாளி வர்க்கம் சுரண்டும் வர்க்கமாகவும்; ஆள்பவர்களாகவும், பரந்துபட்ட உழைக்கும் மக்கள் சுரண்டப்படுபவர்களாகவும்; ஆளப்படுபவர்களாகவும் ஆனார்கள் நிலப்பிரபுத்துவத்தில் நிலப்பிரபுக்களும் மற்றும் ஏதேச்சதிகார மன்னர்களும் பண்ணையடிமைகளின் உழைப்பை தங்களின் சொந்த நுகர்வுக்காகவும் அனுபவிப்பிற்காகவும் அபகரித்தார்கள். ஆனால் அதற்கு மாறாக முதலாளித்துவத்தில் உற்பத்தி சக்தியின் உழைப்பு ஆளும் முதலாளித்துவத்தின் அதிகபட்ச லாபத்தை நிறைவுசெய்வதற்காக அபகரிக்கப்படுகிறது. அவ்வாறு அபகரிக்கப்பட்ட செல்வம் அவர்களை நாகரீகத்தின் அனைத்துவ செல்வாதாரங்களுக்கும் எஜமானனாக மாற்றும்.

ஆகவே உழைக்கும் மக்களின் அடிமைத்தனம் முதலாளித்துவத்திலும் தொடர்கிறது, ஆனால் அதன் குணாம்சம் மட்டும் வேறாகும். இதற்கு முந்தைய சமூக அமைப்பில் அடிமைகளை சொத்தாக பாவிக்கும் முறைக்கு மாற்றாக முதலாளித்துவத்தில் கூலியடிமைத்தனம் இருந்துவருகிறது. தவிர்க்கவியலாத வரலாற்று விதியின் காரணமாக முதலாளித்துவம் அதன் உச்சகட்ட அழுகிய கட்டத்தை அடைந்ததன் காரணமாக உழைக்கும் மக்களை அடிமைப்படுத்துவது என்ற அம்சம் குறிப்பாக கொத்தடிமைமுறை மற்றும் கட்டாய உழைப்பு என்ற வடிவத்தில் அது மிக மிக மனிதத்தன்மையற்ற கொடூரமான வடிவத்தை எட்டியிருக்கிறது. உலகமயம் வந்துவிட்டபிறகு இந்தக் கொடுமையை அது மேலும் உக்கிரப்படுத்தியிருக்கிறது. அடிமைத்தனத்தின் நவீன வடிவங்கள் மிகுந்த அளவில் அதிகரித்து அது பல்வேறுபட்ட கீழ்த்தரமான கொத்தடிமை மற்றும் கட்டாய உழைப்பின் வழியாக தற்போது வெளிப்பட்டு வருகிறது. உலகமயத்தால் பலவந்தமாகக் கொண்டுவந்து திணிக்கப்பட்ட பல்வேறுபட்ட சீர்திருத்தங்கள் என்ற பெயரிலான மாற்றங்கள் குறிப்பாக அடிப்படைத் தொழிலாளர் உரிமைகள் மற்றும் நிலைமைகளில், கூட்டுபேர உரிமை, மனித உரிமை அகியவற்றால் தீவிரப்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றால் இந்தக் கொத்தடிமை மற்றும் கட்டாய உழைப்பு என்ற கொடுமையை மேலும் அதிகரிக்க வழியமைத்திருக்கிறது. பட்டினியிலும், வறுமையிலும் ஏழ்மைபீடித்த நிலையிலும் மிகப் பின் தங்கிய வாழ்க்கை நிலைமையில் அடித்தட்டு மக்கள் உழன்று வருகின்றநிலை, இவர்களை கொத்தடிமைத்தனத்திலும் கட்டாய உழைப்பிலும் ஈடுபடுத்தப்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது.

தற்போது கார்ப்பொரேட் முதலாளிகள் ரியல் எஸ்டேட் பிரமுகர்கள் பகாசுர சில்லறை வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற பூர்ஷுவாக்கள் ஆகியோரால் கட்டாய உழைப்பு மிகப்பெரும் அளவில் அபகரிக்கப்பட்டுவருகிறது. இந்த ஏஜெண்டுகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச கிரிமினல் வலைப்பின்னலுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் கடன்பட்டு பிணையாக வேலைசெய்வது மற்றும் கொத்தடிமையாக வேலைசெய்வது என்பது விவசாயத்திலும் உழைப்பு தீவிர துறைகளிலும் மற்றும் கட்டுமானம் ஆயத்த ஆடை உற்பத்தி, உணவு பதப்படுத்துதல் மற்றும் பேக்கேஜிங் தொழில்பிரிவுகளில் அதிக அளவு நடைபெறுவதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. கடத்திவரப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மிக எளிதாக கொத்தடிமை நிலைக்கு மாற்றப்படுகிறார்கள். கடத்திவரப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மிக எளிதாக கொத்தடிமை நிலைக்கு மாற்றப்படுகிறார்கள் ஏனெனில் அவர்கள் எந்தவித ஆதரவுமற்ற அநாதைகளாக இருக்கிறார்கள். அடிமை உழைப்பின் நவீன வடிவமாக உள்நாட்டுக் குள்ளேயோ அல்லது வெளிநாடுகளுக்கோ தொழிலாளர்களைக் கடத்துவது அடிப்படை மனித உரிமை மீறலே ஆகும். நாட்டின் பல இடங்களிலும் ஒடிசாவின் காலஹந்தியில் நடந்ததைப் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்து வருவதும் மனித உரிமைமீறலே ஆகும். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இளம்பருவப் பிள்ளைகளையும் உள்ளடக்கிய தொழிலாளர் கூட்டம் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டு அங்கு ஆயுத உற்பத்தி–விற்பனை, போதைப்பொருள் உற்பத்தி–விற்பனை மற்றும் பிச்சை எடுக்கவைப்பதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட இந்தப் புலம் பெயர் தொழிலாளர்கள் அந்த நாட்டின் ஏதேனும் ஒரு முதலாளியின் ஆலையிலோ அல்லது பண்ணையிலோ அல்லது சிறைக்கூடங்களிலோ கொட்டடியில் அடைக்கப்பட்ட விலங்குகளைப் போல் வாழ்ந்துவருகிறார்கள். ஆஃப்பிரிக்க கறுப்பினத் தொழிலாளர்கள் கடத்திவரப்பட்டு அமெரிக்க அடிமைக் கப்பல்களில் ஏலம்விடப் பட்டபின்னர் அடிமைகளாக வேலைவாங்கப் பட்டதைப் போன்ற அவலமான துயரம் நிறைந்த நிலையைப் போன்றதுதான் இவர்களின் நிலையும். இந்த புலம்பெயர் தொழிலாளர் பிணையக் கைதிகள் மனிதத்தன்மையற்ற சித்திரவதைக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கப்பட்டதால் மன அழுத்தம், பயஉணர்வு, அதிர்ச்சி, மனத்தவிப்பு, கிட்டத்தட்ட பைத்திய நிலை ஆகிய நோய்களுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு கட்டாய உழைப்பிற்காகக் கடத்தப்பட்டு மீட்கப் பட்டவர்கள் உடற்காயங்கள், தொடர்ந்த தலைவலி காதுகேளாமை மற்றும் பார்வைக்கோளாறு, இதயக்கோளாறு மூச்சுத்திணறலுக்கும் கைகால் வாதம் அல்லது உடல் உறுப்புகள் துண்டிக்கப் பட்டிருத்தல் என பல பிரச்சினைகளுக்கும் ஆட் பட்டிருப்பது தெரியவருகிறது. கட்டாய உழைப்பிற்காக கடத்தப்பட்டு மீட்கப்பட்டவர்கள் வளர்ச்சி குன்றிப்போய் ஊட்டமில்லாதவர்களாக, தங்களின் வாழ்க்கையில் சந்ததியை உருவாக்கும் திறனிழந்தவர்களாக, தொல்லைப்பட்டு வருகிறார்கள். திறமையற்ற உழைப்புத்துறைகளில் மட்டும் இந்தக் கொத்தடிமைமுறை நிகழ்ந்து வரவில்லை. முதலாளித்துவத்தில் உழைப்பாளி மக்கள் ஒவ்வொருவருமே கூலியடிமைகள்தான். முதலாளித்துவ உடைமையாளர்களிடத்தில் தங்களின் உழைப்பைவிற்றுக் கூலிபெறுகின்ற அனைவருமே கூலியடிமைகள்தான். உற்பத்திக் கருவிகளைத் தன்வசப்படுத்திக் கொண்டுள்ள முதலாளித்துவ உடைமையாளர்கள் சமூகத்தில் ஆளும் நிலைமையிலிருக்கும் சாதகத்தைப்

*தொடர்ச்சி 6ம் பக்கம்*

# மனிதத்தன்மையற்ற நடைமுறையை தடுத்து நிறுத்த சரியான புரட்சிகர தலைமையின்கீழ் விழிப்புணர்வுடன் கட்டியமைக்கப்படும் போர்குணமிக்க வர்க்க, வெகுஜன இயக்கமே தேவையாகும்

5ம் பக்கத் தொடர்ச்சி

பயன்படுத்தி தொழிலாளர்கள் அல்லது ஊழியர்களிடமிருந்து கூலி கொடுபடாத உபரி உழைப்பை அபகரித்துக் கொள்வதே கூலியடிமைத்தனமாகும். உலகமய காலகட்டத்தில் இது அதன் எல்லாவிதமான கேடுகெட்ட தீங்குபயக்கும் தன்மைகளுடன் தொழிற்துறை மற்றும் இன்னபிற அனைத்துத் துறைகளிலும் வெளிப்பட்டுவருகிறது.

மிக ஆணவத்தோடு புகழ்ந்துரைக்கப்படும் அதிசௌகரியமான தகவல் தொழில்நுட்பத்திறன் பெற்ற ஊழியர்கள் 24 மணிநேரம் 48 மணி நேரம் என்ற தொடர்ந்து வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். பெரும்பான்மையான வேலைகள் ஒப்பந்த அடிப்படையிலும் அதுவும் வேலையிலிருந்து வெளியேற்றப்படுவீர்கள் என்ற தொடர்ச்சியான மிரட்டலிலும்தான் செய்யவைக்கப்படுகின்றன. இது போன்ற வேலை நிலைமையை கட்டாய உழைப்பு என்ற குறிப்பிடவேண்டாமா? இம்மாதிரியே வேறு விதமான தொழிலாளர் விரோத நடைமுறைகள் கொண்ட சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. இவை அத்துமீறல், ஏமாற்றுதல் மற்றும் கொத்தடிமை உழைப்பின் தன்மையை ஒத்ததாகவே நிகழ்ந்து வருகின்றன.

சில மாதங்களுக்கு முன்பு ஹச்.சி.எல். டெக்னாலஜிஸ் என்று சொல்லக்கூடிய ஐ.டி பகாசுர நிறுவனத்தினால் வேலைக்கு அமர்த்தப் பட்ட என்ஜினியரிங் மாணவபட்டதாரிகள். அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை வழங்கப்பட்ட கடிதத்தை மாற்றியமைத்து முறையான வேலை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் போராட்டம் நடத்தியதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக வேலை சம்பந்தமான கடிதம் வழங்கப் பட்டது. அவர்களுக்கு ஊதியம் வழங்காதது மட்டுமல்ல பலர் வேலைக்குச் சேர்வதற்கான நாள் கொடுக்கப்பட்டு பிற வேலைவாய்ப்புகளை கைவிடவும் நிர்ப்பந்திக்கப்பட்டது. தற்போதைய நிலவரப்படி, மாணவர்கள் பலரும் தங்களை வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று காத்திருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்குப்பின் மற்ற பலரையும் ஹச்.சி.எல் கம்பெனி ஊழியராவதற்கு அவர்களுக்குத் தொழில் நுட்பத்தகுதி இல்லை என்று சாக்குச் சொல்லி வெளியேற்றிவிட்டார்கள். சிபிசி தொலைக்காட்சி ஐகேட் என்ற ஐ.டி நிறுவனம் தங்களது ஆன்சைட் புராஜெக்ட் பணியில் எவ்வாறு இந்திய ஊழியர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறது என்பது குறித்து மிக விரிவான ஒரு செய்தித் தொகுப்பை வெளியிட்டது. ஆடம் விட்லர் என்ற ரகசிய செய்தி நிருபர் ஒருவர்அமேசான் ஸ்வான்சி வேர்ஹவுஸில் வேலைக்குச் சேர்ந்தார். பிபிசி-யின் பனோரமா செய்தி சேகரிக்க அவர் தன்னோடு ஒரு ரகசிய கேமராவையும் கொண்டுசென்றார். அவரது 10½ மணிநேர வேலைநேரத்தில் என்னவெல்லாம் நடந்தன என்பன பதிவுசெய்யப்பட்டன. இவர் அந்த நிறுவனத்தில் ஆர்டர் கொடுத்தவர்களுக்கு பொருள்சேகரித்து அனுப்பும் பணியாளராக வேலைசெய்கிறார். அவரது நிறுவனத்தின் பொருள் இருப்பு அறை 800 ஆயிரம் சதுரஅடி பரப்பளவு கொண்டது. அவரிடம் வழங்கப்பட்ட ஒரு கைபேசி எந்தப் பொருட்களைச் சேகரிக்கவேண்டும் என்பதற்கும் அவருக்கு கட்டளை வழங்குகிறது. குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பெருளை சேகரிக்கவில்லையெனில் அல்லது அவர் வேறு ஏதேனும் கவனக் குறைவான தவறுகள் செய்தாலோ உடனே அவரைக் கண்காணிக்கும் எந்திரத்திலிருந்து எச்சரிக்கை மணி ஒலிக்கிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த அமேசான் வேர்ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியர்களின் இந்தப் பணிநிலைமையை ஆய்வுசெய்து மனஅழுத்தம் பற்றி மருத்துவ நிபுணர்கள் இது ஊழியர்களை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகப்பெரும் நெருக்கடிக்கும் அழுத்தத்திற்கும் ஆளாக்கும் என்று கருத்துக் கூறுகிறார்கள். பேராசிரியர் மைக்கேல் மார்ட்-க்கு இரவு நேர ஷிப்டில் 11 மைல் வரை நடந்து சென்று வேலைபார்ப்பது சம்பந்தமாகக் காட்டப்பட்ட ஒரு ரகசியத் திரைப்படத்தில் ஒரு தொழிலாளி ஆர்டர்களை சேகரிக்க ஒவ்வொரு 33 விநாடிகளுக்கும் ஒரு முறை அவருக்குக் கட்டளை வழங்குகிறது. முதலாளித்துவ உலகமயத்தை வானளாவப் புகழ்பவர்களும்கூட நவீன இந்தியாவின் ஒளிவீசும் தொழிற்துறையாக ஐடி தொழிற்துறையைப் புகழ்ந்துரைத்தவர்களும் கூட தற்போது இயல்பாக நடைபெற்றுவரும்– குறைந்த கூலி, பொருளாதார மந்தம், வேலையின்மை மற்றும் அவுட்சோர்சிங் நடைமுறை இவையனைத்தும் மனிதத்தன்மை கொண்டதாக இல்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டிய நிலையே இருந்துவருகிறது. ஐ.டி துறையில் வேலை செய்கின்ற கால்சென்டர் ஊழியர்கள் உட்பட யாரெல்லாம் தொடர்ந்து அதிக மணிநேரங்கள் வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்களோ அவர்கள் அனைவரும் தீவிர மனச்சோர்வு குழப்பம் மூளைக்கோளாறு போன்ற நோய்களுக்கு உள்ளாகிறார்கள். சமீபத்திய ஒரு மருத்துவ அறிவியல் ஆய்வு ஒரு நாளில் 11 மணிநேரத்திற்கும் மேலாக தொடர்ந்து வேலைசெய்தால் இதயநோய்வரும் வாய்ப்பு 67% என்று அதிகரிக்கிறது என்று குறிப்பிடுகிறது. ஆனாலும் கூட இம்மாதிரியான அதிகபட்ச வேலைநேரம், குறைந்த கூலி, ஏதேச்சதிகாரமான சம்பளக்குறைப்பு அபாயகரமான பணிநிலைமைகள், உடல்ரீதியான துன்புறுத்தல்கள், சித்திரவதைகள், கட்டாய உழைப்பு, கொத்தடிமை உழைப்பு, குழந்தைத் தொழிலாளர் உழைப்பு என இன்னபிற யாவும் எல்லாதடைச்சட்டங்களையும், மரபுகளையும் அப்பட்டமாகமீறி இந்த அழுகிய முதலாளித்துவத்தில் எங்கும் நிகழ்ந்துவருகிறது. ஒடிசாவின் மேற்கு மாவட்டங்களிலிருந்து திரட்டப்பட்டு பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகக் கருதப்படவேண்டும் என்பது உண்மையெனில் சௌகரியமிகுந்த ஐ.டி தொழில் துறையிலும்கூட இருந்துவருவது இம்மாதிரியான கூலியடிமைத்தனம்தானோ?

அடிமை என்ற சொற்பதம் கடல்கடந்து தோட்டத் தொழில்களில் ஆஃப்பிரிக்க நாட்டுத் தொழிலாளர்கள் அமெரிக்காவின் தென் பகுதியிலுள்ள கரீபிய பகுதிகளிலும் சவுக்குக் கம்பைக் கொண்டு வேலைவாங்கப்படுவது என்ற பிம்பத்தோடு மட்டுமே பொதுவாக ஒப்பிட்டுப்பார்க்கப்படுகிறது. முதலாளித்துவத்தில் அடிமைத்தனம் என்பது பழையவடித்தில் இல்லாவிட்டாலும்கூட துப்பாக்கிமுனையில் மனரீதியிலான அல்லது உடல்ரீதியிலான அச்சுறுத்தலின் அனைத்து அம்சங்களும் இருக்கிறது. தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்துதல் என்று நாம்குறிப்பிடும் போது அவை உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியானதாகவோ அல்லது மிரட்டப்படுதல் என்பதோடு தொடர்புடையது. விருப்பத்திற்கு விரோதமாக பிடித்து வைத்திருத்தல், உடல்ரீதியான சிரமங்களைத் திணித்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், வேலையை விட்டுச் செல்வதற்கானஉரிமை, வேலை செய்ய மறுக்கும் உரிமை, மற்றும் இழப்பீட்டிற்கான உரிமை, மனிதத் தன்மைக்கு விரோதமாக ஒருவரை நடத்துதல் இவையனைத்துமே உலகமய கால கட்டத்தில் கட்டாய உழைப்பு மற்றும் கொத்தடிமை உழைப்பின் வடிவங்களே. இதில் வேடிக்கை என்னவெனில், இவையனைத்தும் எல்லா நாடுகளிலும் சட்டவிரோதம் என்ற நிலையிருந்தும் அங்கெல்லாம் இவை நடந்துவருவதுதான். 1948 சர்வதேச மனித உரிமைப்பிரகடனத்தின்படியும் மேலும் 1956ம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையின் அடிமை வர்த்தகம் மற்றும் அடிமைத்தன நடைமுறைகள் ஒழிப்பு துணை மாநாட்டின் பிரகடனத்தின்படியும் இவை தடை செய்யப்பட்டவையாகும். 'நாகரீக' பூர்ஷுவாக்கள் – உலகமயத்தின் தீவிர ஆதரவாளர்கள் – ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் இவர்கள் மலிவான உழைப்பை அபகரிக்கும் தங்களின் வேட்கைக்காக அனைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிமுறைகள் மற்றும் மரபுகளையும் கேலிகூத்தாக்கி தங்களின் விரலுயர்த்தி வெற்றிக் குறிகாட்டுவதற்கு கொஞ்சமும் மனசாட்சி அவர்களுக்கு உறுத்தவில்லை. கூலி அடிமைமுறை என்பது மனிதர்களை அடிமைப்படுத்துவது போன்ற எல்லா அம்சங்களிலும் பலாத்காரத்தைக் கொண்டது என்று காரல் மார்க்ஸ் அன்று சொன்ன கருத்துக்கள் எவ்வளவு சரி என்பதை கண்முன்னே இன்று காணமுடிகிறது.

### மார்க்சிசத்தின் ஒவ்வொரு கூற்றும் நிருபிக்கப்பட்டுவருகிறது

முதலாளித்துவ அமைப்பு முறையில் செல்வம் ஒருமுனையில் குவிவது என்பது துன்ப துயரங்களையும் வேதனையையும் அடிமைத் தனத்தையும் அறியாமையையும், காட்டுமிராண்டித் தனத்தையும், மனிதத் தரவீழ்ச்சியையும் மறுமுனையிலேயே குவிப்பதாகும் என்று சுட்டிக்காட்டிய மார்க்ஸ் அவர்கள் மேலும் இதனை விளக்கியுரைத்த போது, "தொழிலாளர்கள் பணத்திற்காக முதலாளிகளிடம் விற்பது தங்களின் உழைப்பு சக்தியைத்தான்... உழைப்புசக்தி என்பது ஒரு விற்பனைச்சரக்காகும்" என்று விளக்கமளிக்கிறார். மேலும் அவர் இது குறித்து குறிப்பிடும்போது "ஒரு விவசாயிக்கு காளை மாடு தனது உழைப்பை விற்காததைப்போல ஒரு எஜமானருக்கு அடிமையும் தனது உழைப்பு சக்தியை விற்பது கிடையாது. அவர் இதற்குமாறாக சுதந்திரத் தொழிலாளி தன்னையே விற்றுக்கொள்கிறார். அதுவும் பகுதி பகுதியாக, தனது வாழ்நாளின் 8,10,12,15 மணிநேரத் தவணைகளில் தன்னை விற்றுக் கொள்கிறார். ஒருநாளைப் போலல்லாமல் ஒருநாள் தனக்கு அதிக விலைகொடுக்கின்ற – உற்பத்திக் கருவிகளுக்கும் எந்திரங்களுக்கும் கட்சாப் பொருட்களுக்கும் உடைமையாளராக விளங்குகின்ற முதலாளிகளிடம் தன்னை விற்றுக்கொள்கிறார். அவரது வாழ்நாளில் அவருக்குச் சொந்தமான 10,12,15, மணி நேரங்களை யாரெல்லாம் வாங்குகிறார்களோ அவர்களிடம் விற்றுக் கொள்கிறார். ... தொழிலாளியின் வருமானத்திற்கான ஒரே ஆதாரமெனத் திகழ்வது அவரது உழைப்புசக்தியே.... இந்த உழைப்பு சக்தி அந்த குறிப்பிட்ட முதலாளிக்கு மட்டும் சொந்த மானதல்ல ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கத் திற்கும் உரியது. ஒரு கூலித்தொழிலாளி ஒரு கூலித் தொழிலாளியாக நீடிக்கின்ற வரையில் அவரது கதி மூலதனத்தையே சார்ந்திருக்கிறது" மேலும், பாட்டாளிகள் மட்டுமல்ல, "விஞ்ஞானிகள், கவிஞர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், மதகுருமார்கள் ஆகிய அனைவரையுமே பூர்ஷுவாக்கள் தங்களது கூலிதரப்படும் தொழிலாளர்களாக மாற்றி விட்டார்கள். காரல்மார்க்ஸ் அவர்கள் முதலாளித் துவம் ஏகாதிபத்திய அம்சங்களோடு வளர்ந்திராத நிலையில், அது தனது அழுகிய மூப்பு நிலைக்குள் நுழைந்திராத காலகட்டத்தில் 150 ஆண்டுகளுக்கு முன்பாக இதனைக் கூறினார். என்பது மிகமுக்கிய மானது. அப்போது அதன் தவிர்க்கவியலாத தொடர் நெருக்கடிக்கான சில அறிகுறிகள் மட்டுமே ஆங்காங்கே வெளிப்பட்டன. ஆனால் இன்று இந்த சீரழிந்த முதலாளித்துவம் அதன் தீர்க்கவியலாத நெருக்கடியில் மூழ்கடிக்கப்பட்டு, முழுக்க ஊழல் மயமாகி, ஏதேச்சதிகாரமும் கொடுங்கோன்மையும் கொண்டதாகிவிட்டது. தனது உருக்குலைந்த வாழ் நிலையை நீட்டிப்பதற்குக் கடைசித்தாங்கு ஆதாரமாக முதலாளித்துவம் பாசிசத்தை தழுவிக் கொண்ட பிறகு கூலியடிமைத்தனத்தின் கோரமுகம் அதன் அனைத்துவகையான கொடூரம் மற்றும் சீற்றத்துடன் வெளிப்படுத்தப்படுகிறது. ஒடிசாவின் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்களின் கரங்கள் வெட்டப் பட்டு கதறுகின்ற வேளையில் அமேசானின் ஒடுக்கப் படும் தொழிலாளர்கள் 'நாங்கள் எந்திரம்' 'நாங்கள் ரோபோட்டுக்கள்' நாங்கள் எங்களது ஸ்கேனர் கருவிகளின் வயர்களை பல இயந்திரங்களில் பொருத்து கிறோம், அதேபோல் எங்களுக்கும், நாங்களே பொருத்திக் கொள்ளவும்வேண்டும். ஏனெனில் முதலாளிகள் ஒரு மனிதனாக எங்களை சிந்திக்க அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறும் நிலை உள்ளது.

### பலாத்காரத்தின் அடக்கவிலை

கட்டாய உழைப்பைச்சுற்றி பல குற்றத்தன்மை கொண்ட செயல்கள் நிகழ்ந்துவருவதுடன் மனிதத் தன்மையற்ற மற்றும் அவதூறான நடவடிக்கைகளின் விளைவாக பலாத்காரத்தின் 'சந்தர்ப்ப விலை' என்ற பெயரில் பொருளாதார இழப்புகள், வருமான இழப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது. கட்டாய உழைப்பு குறித்த ஐஎல்ஓ அறிக்கை பலாத்காரத்தின் விலை என்று தலைப்பிட்டு கட்டாய உழைப்பினால் பாதிப்பிற்குள்ளானவர்கள் இழக்கும் தொகை (கொடுபடாத சம்பளம்) கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆண்டும் 20 பில்லியன் டாலர்களை விஞ்சுகிறது என்று குறிப்பிடுகின்றது. இது, மனிதத்தன்மையற்ற பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டவரும் அவரது குடும்பமும் அனுபவிக்கின்ற சொல்லமுடியாதத் துன்ப துயரத்தினால் அவருக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் இழப்பாகும். இதன்காரணமாகத்தான் உலகமயத்தினால் லாபமடைகின்ற பகாசுரப் பன்னாட்டு உள்நாட்டு ஏகபோக நிறுவனங்கள் இதனைத் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி ஆட்கடத்தல் மூலமாக அல்லது அவுட்சோர்சிங் மூலமாக மிகப்பெரும் பலனடைகிறார்கள்.

மற்றொரு ஐ.எல்.ஓ அறிக்கையானது இந்தக் கட்டாய உழைப்பின் குற்றம் மிகுந்த நடைமுறை உலகமய காலகட்டத்தில் அனைத்து முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிலும் நடைபெறுவதை திட்ட

தொடர்ச்சி 8ம் பக்கம்

## லண்டனில் 'போர் வேண்டாம்' மாநாடு

# ஏகாதிபத்தியப் போர்களைத் தடுத்திடுவோம், உக்கிரமான அமைதி இயக்கங்களை கட்டியெழுப்புவோம் – தோழர் மணிக் முகர்ஜி

'போரை நிறுத்து கூட்டமைப்பு', லண்டனை அடிப்படையாகக் கொண்டியங்கும் ஏகாதிபத்திய–எதிர்ப்பு போர்–எதிர்ப்பு அமைப்பு, நவம்பர் 30, 2013ல் ஒரு சர்வதேச மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தது. அம்மாநாட்டின் நோக்கத்தலைப்பு 'போர் வேண்டாம்'. மத்திய லண்டனில் நடைபெற்ற அந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்ட சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டி (ஐ.ஏ.சி.சி)யின் பொதுச் செயலாளரும் எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்)யின் பொலிட்பீரோ உறுப்பினருமான மாணிக்முகர்ஜி, இம்மாநாட்டில் பேசினார்.

பல்வேறு விஷயங்களைப் பேசிய அவர் மனித குல வரலாற்றில் தற்போது உலகம் மிகவும் நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்தார். உலகமயமாக்கல் என்ற பெயரில் உழைக்கும் மக்கள் மீது முதலாளித்துவ வர்க்கம் மிகவும் குரூரமான கொலைபாதகத் தாக்குதலைத் தொடுத்துள்ளது. அதன் ருத்ர தாண்டவத்தை தொடர்ந்து சீரழிந்து வரும் உழைக்கும் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைமைகளைக் கண்டு தெரிந்துகொள்ளலாம். மற்றொரு புறம் 'தீவிர வாதத்தை ஒழிக்கிறோம்' 'ஜனநாயகத்தைப்' பாதுகாக்கிறோம் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் பல்வேறு நாடுகளின் மீது போர் தொடுத்து வலுக்கட்டாயமாக அவற்றை ஆக்கிரமித்து அங்கே ஆட்சியை மாற்றி வருகின்றனர். அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் சிருஷ்டிக்க விரும்பும் 'புதிய உலக ஒழுங்கு' இதுதான்.

ஏகாதிபத்தியமே போரை உருவாக்குகின்றது என்ற லெனினது ஆய்வு முடிவை இவையெல்லாம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டன. சோசலிச முகாம் வீழ்ந்துவிட்டதால் போர் அபாயமும் உலக அமைதிக்கான அச்சுறுத்தலும் நீங்கிவிட்டது என்ற பூர்ஷ்வாக்களின் பிரச்சாரங்கள் வெற்றுவேட்டு என்பதை 1990க்குப் பின்பு நடைபெற்ற பல்வேறு ஏகாதிபத்தியப் போர்கள் அம்பலப்படுத்திவிட்டன. சோவியத் யூனியனின் வலிமையை உள்ளுக்குள் இருந்துகொண்டே வந்த திருத்தல்வாதத் தலைமை பலவீனப்படுத்திவிட்டது மலுங்கடித்துவிட்டது. அதோடு வெளியிலிருந்து வந்த அமெரிக்காவின் தூண்டுதலும் இறுதியில் எதிர்–புரட்சிக்கு இட்டுச் சென்றதோடு ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவத்தை மீண்டும் கால்பதிக்கச் செய்துவிட்டது. ஏகாதிபத்தியங்களின் கொள்கைளை உத்வேகத்தோடும் சமரசமின்றியும் எதிர்ப்பதற்கு மாறாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமூக ஜனநாயகக் கட்சிகள் இன்று ஏகாதிபத்தியங்களின் வலைக்குள் விழுந்துவிட்டன, அதோடு உலகமயத்தின் படியே பேசத் தொடங்கிவிட்டன.

ஆனால் ஒருதுருவ உலகத்திலும் கூட முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே உட்பொதிந்திருக்கும் முரண்பாடானது முதலாளித்துவ–ஏகாதிபத்திய பொருளாதாரத்தை தொடர்ந்து உக்கிரமாகி வரும் நெருக்கடிக்குள் மூழ்கடித்து வருகிறது, சுருங்கி வரும் உலகச் சந்தையைப் பங்கிட்டுக்கொள்வதில் ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையேயான போட்டியும் கடுமையாகி வருகிறது. வல்லாதிக்க ஆசையும் ஏகாதிபத்தியங்கள் குறிப்பாக அமெரிக்கா தனது ஆதிக்க வட்டத்தை விரிவுபடுத்த விரும்புவது உலகை பாதுகாப்பற்ற இடமாக ஆக்கிவருகிறது. ஒரு நாட்டிற்கு எதிராக மற்றொரு நாட்டையும், ஒருதரப்பு மக்களுக்கு எதிராக மற்ற தரப்பு மக்களையும் தூண்டிவிடுவது, நாடுகளுக்கிடையேயும் மக்களுக்கிடையேயும் பதற்றத்தை உருவாக்குவது, போர் நடைபெறுவது போன்ற சூழலை உருவாக்குவது, உள்நாட்டுப் போர்களை உருவாக்குவது போன்றவைதான் இன்று உலகம் முழுவதும் உள்ள ஏகாதிபத்தியங்களின் செயல்பாடாக உள்ளது. யூகோஸ்லேவியா, லெபனான், ஆஃப்கானிஸ்தான், ஈராக், மற்றும் லிபியா போன்ற நாடுகளின் மீதான ஈவிரக்கமற்ற ராணுவத் தாக்குதல்களிலும், ஈரான், சிரியா, வடகொரியா, கியூபா, சூடான் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் மீதான தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகள் மற்றும் ராணுவ அச்சுறுத்தல்களில் இவை அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளன. இந்தப் போர்களில், நாசகார நெருப்பு சக்தி, பேரழிவு யுரேனிய குண்டுகள், கொடூரமான ஆளில்லா விமானத் தாக்குதல்கள், கண்மூடித்தனமான படுகொலைகள், சொல்லொணாச் சித்திரவதைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியதன் வாயிலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித்தனம் அம்பலமானது.

திருத்தல்வாத சதியினால் சோவியத் யூனியன் தலைமையிலான வலுவான சோசலிச முகாம் சிதறுண்டதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக ஏகாதிபத்திய அதிகாரங்கள், ஒரு துருவ உலகில் எந்தவிதத் தயக்கமுமின்றி, தங்களது வல்லாதிக்கத்தை, ஆயுதக் கொள்ளையை, கூட்டு வேட்டைகளை எந்தவித தயக்கமுமின்றி மேலும் ஊக்கப்படுத்துவர் என்றும் அதோடு நயவஞ்சக உறவாடுதல் மற்றும் ஆக்கிரமிப்புப் போர்களையும் பன்மடங்கு அதிகப்படுத்துவர் என்பதையும் முன்கூட்டியே எமது கட்சியாகிய எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) கணித்துக் கூறியது. எனவே போர் மற்றும் ஏகாதிபத்தியம் பற்றிய அரசியல் கருத்துக்கள் என்னவாக இருந்தாலும் அதையெல்லாம் கடந்து அனைத்து முற்போக்கு, ஜனநாயக எண்ணம் கொண்ட ஏகாதிபத்திய–எதிர்ப்பு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, ஏகாதிபத்திய தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு ஸ்திரமான கருவியாக, பரந்துபட்ட அளவிலான மக்கள் முன்னணிகளைக் கட்டி எழுப்பவேண்டியது அவசியமென்றும், அதில் கம்யூனிஸ்டுகள் மையத் தலைமையில் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறோம்.

பல்வேறு நாடுகளில் நடைபெறும் இத்தகைய இயக்கங்கள் சரியாக ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டால், ஏகாதிபத்தியப் போர் நடவடிக்கைகளுக்கு எதிரான சரியாகப் போராடுவதற்கான வலிமையான உலகளாவிய ஏகாதிபத்திய–எதிர்ப்பு உக்கிரமான அமைதி இயக்கத்தினை கட்டியெழுப்பமுடியும் என்று நாங்கள் கருதுகிறோம். அதன்படி இதனை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சி (CPB) உள்பட நாங்கள் தொடர்பு வைத்துள்ள அனைத்து கட்சிகளையும் நாங்கள் அணுகினோம். ஆனால் (CPB) தனது இயலாமையைத் தெரிவித்துவிட்டது. அதனால், இந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று நாங்கள் மற்ற சகோதர




கட்சிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் சக்திகளோடு கலந்து பேசி அதற்கான முன்முயற்சி எடுத்தோம்.

அதனைத் தொடர்ந்து நவம்பர் 28,29–2007ல் கொல்கத்தாவில் சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான் உற்சாகத்தோடும் உறுதியோடும் சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டி (ஐ.ஏ.சி.சி) பிறந்தது. அதன் தலைவராக புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், அமெரிக்காவின் முன்னாள் அட்டர்னி ஜெனரலும், சர்வதேச ஆக்சன் மையத்தின் தலைவர் ராம்சே கிளார்க் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று முதல், தானே முன்வந்து ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக ஐ.ஏ.சி.சி. தனது தளராத முயற்சிகளாலும் செயல்களாலும் உலகம் முழுவதுமுள்ள ஏகாதிபத்திய – எதிர்ப்பு இயக்கங்களை வழிநடத்தி ஒருங்கிணைக்கும் ஒரு நம்பத்தகுந்த நம்பிக்கைக்குரிய அமைப்பாக உருவெடுத்துள்ளது.

தனது செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக ஐ.ஏ.சி.சி. மேலும் இரண்டு மாநாடுகளை பெய்ரூட் மற்றும் டாக்காவில் நடத்தியுள்ளது. விரைவில் உரிய இடத்தில் தனது நான்காவது மாநாட்டை நடத்தவும் திட்டமிட்டுள்ளது. ஏகாதிபத்திய ஆவேசத் தாக்குதல்கள் மற்றும் நயவஞ்சக சதிகளுக்கு எதிராக ஒன்றுதிரட்டப்பட்ட உக்கிரமான இயக்கங்களைக் கட்டி எழுப்பும்படி அனைத்து ஏகாதிபத்திய–எதிர்ப்பு மக்களுக்கும் ஐ.ஏ.சி.சி. அறைகூவல் விடுக்கிறது. அதோடு ஏகாதிபத்திய போர்த் திட்டங்களை முறியடிப்பதற்காக உலகளாவிய ஏகாதிபத்திய – எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவதற்காக இந்த இயக்கங்களை ஒன்றிணைப்பதற்கான புதிய முறைகளை வகுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம். ஐ.ஏ.சி.சி. இன் இந்தக் கருத்துக்களை ஆதரித்துள்ள 'போர் வேண்டாம்' மாநாடு அமைப்பாளர்கள், இந்தப் போராட்டத்தில் இணையவும் ஆர்வம் காட்டியுள்ளனர். மறுநாள், அதாவது டிசம்பர் 1 அன்று, மாநாட்டு அமைப்பாளர்களுடன் தோழர் மணிக் முகர்ஜி கலந்துரையாடினார்.

ஐ.ஏ.சி.சி. நடத்தக்கூடிய உலகளாவிய ஏகாதிபத்திய–எதிர்ப்பு போர்–எதிர்ப்பு உக்கிரமான அமைதி இயக்கத்திற்கு அவர்கள் எப்படி உதவலாம் என்பது குறித்து விவாதித்தார்.

## புதுதில்லி பெண்கள் மீதான...

*2ம் பக்கத் தொடர்ச்சி*

ஒழிப்பதற்கு நிர்வாகம் காவல்துறை மற்றும் அரசியல் அமைப்புக்களிடம் காணப்படும் அக்கறையின்மையுடன் இணைந்துவிடும்போது மேலும் உக்கிரமாகிறது. சட்டங்கள் இயற்றப்படுவதால் மட்டும் மாற்றத்தை கொண்டு வராது. தேசிய அளவிலான தொடர்ச்சியான இயக்கமே இத்தருணத்தின் தேவையாகும்' என்று தோழர் சாயா முகர்ஜி எடுத்துரைத்தார். பெண்களின் முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய ஒட்டுமொத்த சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பையே புரட்சிகரமாக மாற்றவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

AIMSSன் துணைத் தலைவர் Dr சுதா காமத் அவர்கள், குற்றங்கள் பெருகிவரக் காரணிகள் யாவை என விவரித்தார். ஊடகங்களில் பாலியல் ஆபாசங்கள் மற்றும் வன்முறைகள் பரவுதல், மது மற்றும் போதை பொருட்களுக்கு அடிமையாதல், குற்றமயமாகும் அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகியவையுடன் இணைந்த கலாச்சார சீரழிவு இவை யாவுமே பெண்களுக்கெதிராக குற்றங்கள் நடக்கக் காரணங்களாகும் எனவும் இவற்றை கட்டுப்படுத்த அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கங்கள் தவறிவிட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் தலைமை நீதிபதியும் தேசிய மனித உரிமைக் கமிஷனின் சேர்மனுமான நீதிபதி MN வெங்கடாச்சலையா அவர்கள் மாநாட்டிற்கு விடுத்த செய்தியும், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் கர்நாடகாவின் முன்னாள் லோக் ஆயுக்தா தலைவருமான நீதிபதி சந்தோஷ் ஹெக்டே அவர்கள் விடுத்த செய்தியும் அவையில் வாசிக்கப்பட்டது.

அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் தலைவர் கமல் சென் மாநாட்டில் எழுந்த கோரிக்கைகளை முன்வைத்தார். நீதிபதி வர்மா கமிஷன் பரிந்துரைகளை அமலாக்க வேண்டும், மது மற்றும் ஆபாசம் பரவுதலை தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பன அவற்றில் அடங்கும். இக்கோரிக்கைகளை ஆதரித்து ஆமோதிக்குமாறும் நாடுமுழுவதும் இவ் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

AIMSS, AIDYO, AIDSO அமைப்புகளின் பல்வேறு தலைவர்கள் இக்கோரிக்கைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து உரையாற்றினர். அனைத்து கோரிக்கைகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாலையில் கலாச்சார நிகழ்ச்சிகளின் அங்கமாக புரட்சிகர கானங்களும், 'நிர்பயா' சம்பவப் பொருளில் மௌன நாடகமும், பெண்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்த போராட்டத்தைக் குறிப்பிடும் பரத நடன நாட்டியமும் அடங்கும்.

இம்மாநாட்டில், நாட்டின் 22 மாநிலங்களிலிருந்து வந்த பெண்கள் அமைப்பு, இளைஞர் மாணவர் அமைப்புகளின் அமைப்பாளர்களும் செயல் வீரர்களும் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். சமூகத்தில் பெண்களுக்கெதிராக அவிழ்த்து விடப்படும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை எதிர்த்து மனசாட்சி கொண்ட அறிவு ஜீவிகள் ஓங்கி உரைத்த கருத்துக்களால் ஊக்கமும் எழுச்சியும் பெற்று இப்போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்த உறுதியேற்று திரும்பிச் சென்றனர்.

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 25th February 2014

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# நேதாஜியின் 117வது பிறந்தநாள் அனுஷ்டிப்பு





சென்னை

நெய்வேலி





மதுரை

தேனி

ஒவ்வொரு வருடமும் ஜனவரி **23** ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை இந்தியாவிலிருந்து விரட்டியடிக்க முழுமையான சுதந்திரத்தைக் கோரி ஆயுதந்தாங்கிய எழுச்சியை துவக்கி நடத்திய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்தநாளாகும். அன்னிய அதிகாரத்தின் கீழ் சுயாட்சி அந்தஸ்து (டொமினியன் ஸ்டேட்டஸ்) போதும் என ஏகாதிபத்தியத்துடனும் காலங்காலமாக நிலப்பிரபுத்துவத்திற்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்களிடம் நிலவிய அறிவியலுக்குப் புறம்பான சிந்தனைகள், சாதி மத பேதங்கள், பெண்ணடிமைக் கருத்துக்கள் இவற்றை புரட்சிகரமாக மாற்றுவதற்கு தடையாக இருக்கும் பழமைவாத கலாச்சாரத்துடனும் சமரசம் செய்துகொண்டு போராடிய காந்தியவாதத் தலைமைக்கு மாறாக 'முழுமையான சுதந்திரம்' வேண்டும் என போராடிய சமரசமற்ற விடுதலை வீரர்களுக்கு நேதாஜி தலைமை வகித்தார். 'கெஞ்சிப் பிச்சை கேட்பதினாலோ அல்லது மனுகொடுத்து மன்றாடுவதாலோ சமரசம் மற்றும் சீர்திருத்தங்கள் மூலமாகவோ நாட்டின் அடிமைச் சங்கிலியை அறுதெறியமுடியாது; சுதந்திரம் ஒருவரின் விலைமதிப்பற்றவற்றை வழங்கும்படி கோருகிறது; அது ரத்தத்தையும் ஏன் உயிரையும் கூட வழங்கக் கோருகிறது. ரத்தத்தைக் கொடுங்கள் நான் சுதந்திரத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன்' என்று முழங்கியவர் நேதாஜி. அத்தகைய தியாகத்திற்கு தானே எதுத்துக்காட்டாகவும் அவர் திகழ்ந்தார்.

நேதாஜியைப் போன்ற நாயகர்களின் வாழ்க்கையையும் கலாச்சாரத் தரத்தையும் மக்களிடம் தொடர்ந்து எடுத்துச் சென்றுகொண்டிருக்கும் அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் AIDYO, அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் AIDSO, அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் AIMSS ஆகியவை இவ்வருடமும் நேதாஜியின் **117**வது பிறந்தநாளை மாநிலத்தின் பல இடங்களில் சிறப்பாக அனுஷ்டித்தன.

தேனியில் ஸ்டேட் பேங்க் திடலில் **24.01.2014**–ல் நேதாஜி புகைப்பட கண்காட்சியும் கூட்டமும் நடைபெற்றது. இரவு நெடுநேரம்வரை பொதுமக்கள் கண்காட்சியை கண்டுகளித்தனர். மதுரையில் **23.01.2014** அன்று நேதாஜி பிறந்த தின கூட்டம் காந்தி மியூசியத்தில் நடத்தப்பட்டது. நேதாஜியின் உருவ படத்திற்கு கல்வி பாதுகாப்பு கமிட்டி சார்பில் ம.ஜெயராமன் மலர் மாலை அணிவித்தார்.

சென்னையில் **23.01.2014** அன்று நேதாஜி ஸ்தாபித்த ஐ.என்.ஏ (INA) படையில் போராடிய தியாகிகள் கணிசமாக வாழும் பக்தவச்சலம் காலனியில் அம் மூத்த தியாகிகளுடன் இணைந்து நேதாஜி சிலைக்கு மாலை அணிவக்கப்பட்டது. பின்னர் அப்பகுதியில் மேற்கோள் – புகைப்படக் கண்காட்சியும் தெருமுனைக் கூட்டமும் நடைபெற்றது. மற்றுமொரு பகுதியான சிவகாமி அம்மையார் காலனியிலும் நேதாஜி இளைஞர் மன்ற செயல் வீரர்களுடன் இணைந்து புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

**26.01.2014** அன்று சென்னையில் மாவட்ட அளவிலான நேதாஜி பிறந்த தினக் கண்காட்சியும் பொதுக்கூட்டமும் மூன்று சங்கங்களின் சார்பில் வியாசர்பாடியில் நடத்தப்பட்டது. **23.01.2014** அன்று நெய்வேலி மந்தாரக்குப்பம் பேருந்து நிலையத்தில் நேதாஜியின் வாழ்க்கைப் போராட்டங்களை விளக்கும் புகைப்படம் மற்றும் பொன்மொழிகண்காட்சி நடைபெற்றது. அதேநாளில் புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் அலுவலகத்திலும் விவாதக் கூட்டம் நடைபெற்றது.

## முதலாளித்துவ உலகமயத்தில் . . .

*6ம் பக்கத் தொடர்ச்சி*

வட்டமாகத் தெரிவிக்கிறது. அதற்கான ஆதாரங்களையும் உண்மைச் சம்பவங்களையும் எவ்வாறாக நவீன கட்டாய உழைப்பு பகுதிவாரியாக, பாலின வேறு பாட்டு அடிப்படையில் பல்வேறு வடிவங்களில் நடைபெற்று வருகின்றது என்பதை முன் வைக்கிறது. பொருளாதார மற்றும் பாலியல் ரீதியிலான சுரண்டலுக்காக குற்றவாளிகளால் கடத்தப்பட்டு அவர்கள் லாபமடைகின்ற தொகை மட்டும் ஆண்டுக்கு **32** பில்லியன் டாலரை விஞ்சுகிறது என்று முதல் முறையாக அறிக்கை வெளிப் படையாக அறிவித்திருக்கிறது. இது உண்மையில் ஒரு உருக்குலைந்த காட்டு மிராண்டித்தனமான நாகரீகமே. "இங்கே மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் எங்கு நோக்கினும் கைவிலங்குகளால் கட்டுண்டு கிடக்கிறான்" என்ற பிரஞ்சுப்புரட்சியின் போராளி ரூசோவின் வார்த்தைகள் உண்மையே.

### கூலியடிமைச் சமுதாயத்தின் எஜமானர்களுக்கெதிராய் கிளர்ந்தெழுவோம்!

நவீன வடிவத்திலமைந்த கொத்தடிமை மற்றும் கட்டாய உழைப்பு ஆட்கடத்தல் குற்றங்களை இவ்வளவு ஈவிரக்கமற்ற முறையிலும் வெறித்தனத்தோடும் இந்தக் கும்பல்களால் எப்படிச் செய்து வரமுடிகிறது என்பதுதான் ஒவ்வொரு நற்சிந்தனை கொண்ட ஆக்கப்பூர்வமான மனதையும் உலுக்க வேண்டிய கேள்வியாகும். சட்டமியற்றுவதும் சில மாநாடுகளை நடத்துவதும் இந்தப் பிரச்சினைகளை வேருடன் களைவதற்குப் போதுமானதென்று கருதுபவர்கள் உண்மையில் மிகவும் தவறு செய்கிறார்கள். சீரழிந்து போனவர்கள் ஒழுக்கநெறி போதனைகளுக்கெல்லாம் செவிசாய்க்க மாட்டார்கள். அவர்கள் காதுகொடுக்கும்படியான நிர்ப்பந்தத்தை நாம்தான் உருவாக்கவேண்டும்! நவீன முதலாளித்துவச் சுறாக்களும் அவர்களின் அடிவருடிகளும் இந்த ஒரு துருவ உலகத்தில் தங்குதடையின்றி உழைக்கும் மக்களைச் சுரண்டி கொழுத்துவருகிறார்கள். உழைப்பாளி மக்களைப் புராதனகாலத்து அடிமைகளைப்போல் நடத்தி தங்களின் பணப் பெட்டிகளை நிரப்பிக் கொள்கிறார்கள். ஒடுக்கப்படும் உழைப்பாளி மக்கள்– இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக அணி திரட்டப்பட்ட ஒன்றுபட்ட எதிர்ப்பியக்கங்களில் கிளர்ந்தெழ வேண்டியது அவர்களின் கடமையாக முன்னிற்கிறது. ஒவ்வொரு நாட்டின் தொழிலாளி வர்க்கமும் பிறபகுதி உழைக்கும் மக்களுடன் கரம்கோர்த்து தங்களின் ஒற்றுமையைப் பலப்படுத்தி மிகுந்த விழிப்புணர்வுடன் போர்க் குணமிக்க வர்க்க வெகுஜனப் போராட்டத்தினை ஒரு சரியான புரட்சிகர தலைமையின்கீழ் கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் மட்டுமே தங்களின் நியாயமான உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். இந்த சீரழிந்த முதலாளித்துவம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஆணிவேராக விளங்குவதால் இறுதி விடுதலையென்பது புரட்சிகரமான முறையில் அதனை தூக்கியெறிவதில்தான் சாத்தியப்படும். ஆகவே அனைத்துப் போராட்ட இயக்கங்களும் முதலாளித்துவ எதிர்ப்புத் திசைவழியில் பலப்படுவதற்கு ஏதுவாக வளர்த் தெடுக்கப்படவேண்டும். அவ்வாறன்றி விலகி திசைமாறிச் செல்லும் போராட்டங்கள் அதன் தர்க்கரீதியிலான பலன்தரும் முடிவை எட்டமுடியாது இவ்வாறாக இப்போராட்டங்களின் பலம் அதிகரிக்க அதிகரிக்க இது ஆளும் வர்க்கத்தையும் அதன் ஏஜெண்டுகளையும் இந்த கேடுமிகுந்த ஆட்கடத்தல், கட்டாய உழைப்பு நடைமுறையிலிருந்து பின்வாங்கச் செய்வதற்கான அழுத்தத்தை அதிகரிக்கும். அதேநேரத்தில். தற்போது நடந்துவரும் கொத்தடிமை முறைகேடுகள் பற்றியும் அவற்றிற்கு எதிராகவும் மக்கள் கருத்தை வளர்த்தெடுத்து இந்த ஆட்கடத்தல் மாஃபியாக்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கக் கோரிக்கை விடுத்தல் வேண்டும். குறிப்பாக அறிவுத்துறையினர் இதற்கு பெருமளவில் முன்வந்து உதவ வேண்டும் நமக்குக் கிடைக்கின்ற அனைத்து வழிகளிலும் முறைகளிலும் இப்போராட்டத்தை அனைத்துத் திசைகளிலும் தீவிரப்படுத்தவேண்டும்.

ஒடிசாவின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நடந்த கொடுமை அல்லது வேறெங்கும் நடக்கும் கூலியடிமைத்தனத்தின் அவலங்கள் உண்மையில் நம்மை வேதனைக்குளாக்குகிறது என்றால் உரிய நேரத்தில் மிகச்சரியான திசைவழியில் மேற்சொன்ன வழிமுறைகளை நாம் முன்னெடுத்தே ஆகவேண்டும்.

**சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் வடசென்னை, தென் சென்னை, மற்றும் தேனி ஆகிய மூன்று தொகுதிகளில் போட்டியிடுகின்றது.**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in